MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNBIL/2015/64028 - 1ST WEEK OF EVERY MONTH








# மித்ரா டைம்ஸ்
# MITRA TIMES

ஆண்டு-2 Volume-2 | இதழ்-3 Issue-3 | ஆகஸ்ட் - 2016 August - 2016 | தமிழ் & ஆங்கிலம் மாத இதழ் Tamil & English Monthly | விலை ரூ.20/- Price Rs.20/- | ஆண்டு சந்தா ரூ.240/- Annual Subscription Rs.240/-






நாக தோஷம் தீர்க்கும்
## ஆசூர் ஏகாம்பரநாதர்




கனவு நாயகனின்
நினைவு நாள்

தாய்க்கு தாலாட்டு
-சுற்றுச்சூழல் கட்டுரை

# பட்ஜெட்டில் சொன்னதைச் செய்வார் அம்மா!

- தமிழக மக்கள் நம்பிக்கை



# கனவு நாயகனின் நினைவு நாள்

ஜூலை 27

நீங்கள் உறங்கும்போது
வருவது கனவல்ல..
உங்களை உறங்க விடாமல்
செய்வதே கனவு

நம் பிறப்பு ஒரு சம்பவமாக
இருக்கலாம் ஆனால்
இறப்பு ஒரு சரித்திரமாக
இருக்கவேண்டும்

முடியாத விஷயங்கள்
குறித்து கனவு
காண்பவர்களே...அவற்றை
வெற்றி கொள்ள முடியும்

நம்பிக்கை நிறைந்த
ஒருவர் யார்முன்னும்
எப்போதும்
மண்டியிடுவதில்லை



## பயனுள்ள அப்துல்கலாமின் பொன் மொழிகளை ...

மாணவர்கள் மனதில் நிறுத்தினால் நன்றாக படிக்"கலாம்".

தொழிலதிபர்கள் தொழிலை கவனித்தால் ஜெயிக்"கலாம்"

கலைத்துறையினர் கடைபிடித்தால் அவர்கள் கலையை மற்றவர்கள் ரசிக்"கலாம்".

பெண்கள் கடைபிடித்தால் பாதுகாப்பாய் இருக்"கலாம்"

அனைவரும் கடைபிடித்தால் வாழ்க்கையில் நிம்மதி கிடைக்"கலாம்".

Owned and published by **M.SUNDARAMOORTHY** from No. 602 Suruthi Block, Chitra Avenue, 9, Choolaimedu High Road, Chennai - 600 094. and printed by him at **SRI PADMALAYA PRINTERS**. No.8/18, Manali Salai, Korukkupet, Chennai - 600 021. Editor : **M.SUNDARAMOORTHY**



# உள்ளே.....


| | |
|---|---|
| என் எண்ணம் ஆசிரியர் கடிதம் | 4 |
| தாய்க்கு தாலாட்டு | 5 |
| தேனும்நெய்யும் சேர்ந்தால் நஞ்சு! | 7 |
| சிறந்த நிர்வாகி என்பவன் யார்? | 8 |
| அற்புத மூலிகைகளின் மலை கொல்லிமலை | 10 |
| மொழியின் வரலாறு | 15 |
| சுதந்திரப் போரின் துவக்கம் | 18 |
| பெண்கள் மீதான சமுதாயப் பார்வை | 20 |
| வாடிகன் அரண்மனையின் அதிசயங்கள், அறியாத இரகசியங்கள் | 24 |
| உப்பு மந்திரம் - அறிவியல் ஆய்வு | 26 |
| விளம்பரம் பார்த்து மனை வாங்கப் போறீங்களா? — விழிப்புணர்வுத் தொடர் | 28 |
| நாகதோஷம் தீர்க்கும் ஆசூர் ஏகாம்பரநாதர் | 34 |
| சைலேந்திரபாபு ஐ.பி.எஸ். | 39 |
| பட்ஜெட்டில் சொன்னதை செய்வார் அம்மா | 42 |
| கபாலி விமர்சனம். | 48 |



**மித்ரா டைம்ஸ்**
மாத இதழ்

ஆண்டு-2 ஆகஸ்ட் -2016 இதழ் -3

அச்சிட்டுவெளியிடுபவர்
ஆசிரியர்
**M.சுந்தரமூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்
**திருமதி.சுஜாதா மூர்த்தி**

தலைமை செய்தியாசிரியர்
**K.பாலகிருஷ்ணன்**

இதழ் சிறப்பு ஆலோசகர்கள்
**G.ராம்மோகன்**
**R.குணசேகர்**
**M.G.சேகர்**

நிர்வாக மேலாளர்
(விற்பனை, விளம்பரம், சந்தா)
**V.மோகன்ராஜ்**
9710362234

சட்ட ஆலோசகர்
**V.N.பிரசாத்** M.A.,B.L.,

மாவட்ட செய்தியாளர்கள்
கோவை M.சாகுல் ஹமீது
திண்டுக்கல் முபாரக்
சேலம் பிரவீன்குமார்
திருப்பூர் R.அருண்

வடிவமைப்பு
VR.design
Ph : 044-43930268

**அலுவலக முகவரி**
# 602, ஸ்ருதி பிளாக்,
சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு,
சென்னை -94.
போன் : 044-23744661,
044 - 23743007/8
Watsup No. 9841843773
e-mail:mitratimes2015@gmail.com

எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது

ஆசிரியர் கடிதம்

# தீர்வு கிடைக்குமென நம்புவோம்!



அன்புடையீர் வணக்கம்.

இந்த இதழ் முதல் மித்ரா டைம்ஸ் மாத இதழ் வடிவமைப்பில் பல மாறுதல்களுடனும். புதுப்பொலிவுடனும் கூடுதல் பக்கங்களைக் கொண்டு விலை ரூபாய் 20 என நிர்ணயிக்கப்பட்டு வெளிவருகிறது. தாங்கள் வழக்கம் போல் நல்லாதரவை தருவீர்கள் என்று நம்புகின்றோம்.

அண்ணல் அம்பேத்கர் எழுதிய அரசியல் அமைப்புச் சட்டத்தில் அவ்வப்போது திருத்தம் கொண்டு வரப்படுவது உண்டு. சட்டம் படித்தவர்கள் சட்டத்தை மீறும் போதும்,



சட்டத்தை மதிக்காமல் இருக்கும் போதும், நீதியை நிலைநாட்ட முடியாது. நீதிபதி ஒருவர் வாட்ஸ்அப் மூலம் இன்னொரு நீதிபதியை விமர்சித்துள்ளார் என்று கேள்விப்படும்போது, சாதாரண மனிதனின் நிலை என்ன என்ற கேள்வி எழுகிறது.

வழக்கறிஞர்கள் மீதான நடவடிக்கை களை நீதிமன்றமே மேற்கொள்ளும் என்ற சட்ட திருத்தத்தை சென்னை உயர்நீதி மன்றம் கொண்டு வந்ததனால் கடந்த 2 மாதங்களாக வழக்கறிஞர்கள் அந்த விதியை எதிர்த்து வீதிக்குவந்து போராடிக்கொண்டிருக் கின்றனர்.

தற்போது அந்த விதியை தாற்காலிக மாக நிறுத்தி வைத்துள்ளோம் என்று நீதிபதிகள் அறிவித்த பின்பும் வழக்கறிஞர் களின் போராட்டம் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது வழக்கறிஞர்களுக்கும் நீதிபதிகளுக்குமான மோதல் போக்கு என்று எண்ணுகின்ற அளவுக்கு முந்தைய நிகழ்வுகள் நம் நினைவுக்கு வருகிறது.

◊ கடந்த ஆண்டு நீதிபதிகள் நியமனத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கோரிக்கை மனு வழக்கறிஞர்கள் அளித்ததில் தொடங்கிய உரசல்

◊ ஹெல்மெட் சட்டத்தை எதிர்த்தது

◊ நீதிபதிகளின் மீதான ஊழல் பட்டியலை வெளியிட்டது.

◊ உயர்நீதிமன்றத்தின் பாதுகாப்பை மத்திய அரசின் பாதுகாப்பு படையின் கண்காணிப்பில் கொண்டு வந்ததை எதிர்த்தது

என படிப்படியாக துவங்கிய வழக்கறிஞர்களின் போராட்டம் தற்போது இந்த விதியினால் தீவிரமடைந் துள்ளது. இந்த போராட்டத்தின் போது வழக்கறிஞர்கள் முதலில் 44 பேர் தற்போது 126 பேர் இடைநீக்கம் செய்யப் பட்டுள்ளது மேலும் வழக்கறிஞர்களை கொந்தளிப்படைய செய்துள்ளது. இந்த பிரச்சனை தீர்வுக்கு வரவேண்டுமென்று பொதுமக்களுக்கும் வழக்கை எதிர் கொள்ளும் வழக்காடிகளும் மிகுந்த ஆர்வத்தோடு எதிர்பார்க்கின்றனர். நல்லதே நடக்குமென நம்புவோம்.

**வாசகர்கள், அலுவலர்கள், எழுத்தாளர்கள், நிருபர்கள், செய்தியாளர்கள், விற்பனையாளர்கள் விளம்பரதாரர்கள், நண்பர்கள், அனைவருக்கும் 69வது சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்**

**எம்.எஸ்.மூர்த்தி** -ஆசிரியர்

## என் எண்ணம்



சுற்றுச்சூழல்



# தாய்க்கு தாலாட்டு

யோசிக்கிற நேரமிது!
பூமியை நேசிக்கிற நேரமிது!

நோவடஞ்சு போனாளே பூமித்தாய்
நொம்பலமா கெடக்காளே!

மனமொடஞ்சு போனாளே பூமித்தாய்
மக்கள் செய்யும் செயலாலே!

பூமாதேவி நல்லாருந்தாஇங்க
பொலபொலன்னு மழை பெய்யுமே!
மண் மாதா நல்லாருந்தாஇங்கே
மளமளன்று மழை பெய்யுமே!

முப்பாட்டன் வாழ்ந்த மண்ணு
பூமித்தாய் வளமாக இருந்த மண்ணு!
எம்பொழப்பு இருக்கும் மண்ணுபூமித்தாய்
ஏங்கியேங்கித் தவிக்கும் மண்ணு!

கருவாக்கிச் சுமந்தவளை பிள்ளைகள்
காலமெல்லாம் காக்கணுமே!
உருவாக்கி வளர்த்தவளை பிள்ளைகள்
உண்மையாகக் காக்கணுமே!

பிள்ளைக்குத் தாலாட்டு இங்கே
பெத்தெடுத்த தாய்பாடும் சீராட்டு!
தாய்க்கே தாலாட்டு இப்போ
நான்பாட ஏது வாய்ப்பாட்டு!

வெய்யில் கொளுத்துகிறது. அனல் பறக்கிறது. பூமியெல்லாம் சுடுகிறது; மழை பெய்ய மறுக்கிறது. நிலத்தடி நீர் குறைகிறது; குளிக்கவும் குடிக்கவுமான நல்ல நீருக்காக அலைய வேண்டியிருக்கிறது.

நீரிலும் மாசு நிலத்திலும் மாசு; சுவாசிக்கும் காற்றிலும் மாசு. உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற ஒரே கோளான பூமியும் இந்த நிலையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மாறிக்கொண்டே வருகிறது.

இப்படியொரு நிலை வந்தது யாரால்? யானை, தன் தலையில் தானே மண்ணையள்ளிப் போட்டுக்கொள்வதைப் போல, இது நமக்கு நாமே இட்டுக்கொண்ட சூடல்லவா? இந்த மண்ணின் இயல்பை மாற்றிக் கொண்டிருப்பது நாமல்லவா? இதை இப்படியே விட்டு விடலாமா?

நாம் வாழ வேண்டாமா? நாம் ஆசை ஆசையாய் பெற்றெடுத்த நம் பிள்ளைகள், நம் பேரப்பிள்ளைகள் என நம் வம்சாவழியினர் வாழ வேண்டாமா? நம்மைப் போலுள்ள ஆயிரமாயிர மான ஜீவராசிகள் இந்த மண்ணில் வாழ வேண்டாமா? அதற்கேற்ற வழிவகைகளை நாம் காண வேண்டாமா? அந்த வழிமுறை களைச் செய்தால் நம்மால் முடியாதது இல்லையே?

மண்ணுக்கு ஆதாரம் மரங்கள், மனித வாழ்வுக்கும் ஆதாரம் மரங்கள் என்னும் பசுமை மொழிக்கு ஏற்ப, இந்தப் புவிப்பரப்பில் மூன்றில் ஒரு பாகத்தைக் காடுகளாக்குவோம். அதற்கு, நிலத்தை வைத்திருப்பவர்கள். அங்கு மரங்களை வளருங்கள். நிலமில்லாதவர்கள் அவரவர்கள் வீட்டுக்குமுன்

மரங்களை வளருங்கள். சாலையோரங்களில், அரசு நிலங்களில் வளர்த்து விடுங்கள்.

இதைச் செய்துவிட்டால், மரமே மழைக்கு உறவாம். மரமிருந்தால் தான் மழை வருமாம் என்னும் பசுமை மொழிக்கு ஏற்ப, மழை பொழியும். சூடு தணிந்து பூமி குளிரும். நிலத்தடிநீர் பெருகும்; நீர்ப்பஞ்சம் அகலும்.

கெட்ட காற்றை நல்ல காற்றாக மாற்றும் வல்லமை மரங்களுக்கு மட்டுமே உள்ளதால், காற்று மாசு மறையும். காற்று மாசு அகன்றாலும் பூமியின் சூடு குறையும். இலை தழைகளை உதிர்த்து மண் வளத்தைக் கூட்டுவதிலும், மழையாலும் காற்றாலும் மண்ணரிப்பு ஏற்படாமல், மண்ணை இறுகப்பற்றிக் காப்பதிலும் மரங்களின் பங்கு மகத்துவமானது. எனவே உலகத்தைக் காப்பது பசுமை; அதை உருவாக்குவது நமது கடமை என்னும் பசுமை மொழியை மனதில் கொண்டு, இந்தப் பூமியைப் பச்சைப் பசுமையாக்குவோம்.

ஒரு மரம் வளர்த்தால் வீதியெல்லாம் தோப்பாகும்! ஆளுக்கொரு மரம் வளர்த்தால் அண்டமெல்லாம் வனமாகும்!. இதுவரையில் இந்தச் செயலில் இறங்கா விட்டாலும், இன்றிலிருந்தே, இப்போதிருந்தே மரக்கன்றுகளை நட்டு வளர்க்கத் தொடங்குவோம்.

மரங்களால் கிடைக்கும் மழைநீரை வீணாக்காமல் சேமிப்போம். மழைநீர் தானே நிலத்தடி நீர்? இதை மறந்தால் வருமா குடித்திட நீர்? காசைப் போலக் கண்டபடி செலவழிக்காதீர்! நீரைக் கணக்காகச் செலவழிக்க மறந்து விடாதீர்! எல்லா வீட்டிலும் மழைநீர்ச் சேமிப்பு! இதைச் செய்தால் பஞ்சமில்லை நீருக்கு! செல்வத்தைச் சேமிப்பது மட்டுமே சேமிப்பா? சிக்கன நீர்ச் செலவும் சிறந்த சேமிப்பே! அருமையை உணர்த்தும் இந்தப் பசுமை மொழிகளை மனதில் கொண்டு நீரைச் சேமித்துச் சிக்கனமாகப் பயன்படுத்துவோம்.

இந்த மண்ணைக் கெடுப்பதில் பிளாஸ்டிக் பொருள்களுக்கு முக்கியப் பங்குண்டு. ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் மட்காத தன்மையைக் கொண்ட பிளாஸ்டிக் மண்ணுக்குள் புதைந்தால், நிலத்துடி நீர்ச் சேமிப்பில் பாதிப்பு உண்டாகிறது. தீப் பிடித்து எரிந்தால், காற்று மாசடைவதுடன், அந்தக் காற்றைச் சுவாசிக்கும் நமக்கும் தீங்கு உண்டாகிறது. எனவே, இந்த பிளாஸ்டிக் தவிர்ப்போம். சூழலைக் காப்போம்.

இயற்கை தந்த வரம், எந்த இணையும் இல்லாத மரம்! இயற்கையை நேசிப் போம்! இன்பத்தைச் சுவாசிப்போம்! இயற்கையைப் பாதுகாப்போம்! இளைய தலை முறையை வாழ வைப்போம்!

**ஆசிரியர் பசுமை முருகேசனின் "பச்சை பூமி" இதழிலிருந்து**

## எது சிக்கனம்

சிக்கனம் என்பது ஒருவன் பணத்தை எவ்வளவு குறைவாகச் செலவு செய்கிறான் என்பதைப் பொறுத்தது அல்ல. அதை அவன் எவ்வளவு உபயோகமாகச் செலவிடுகிறான் என்பதைப் பொறுத்தது ஆகும்.



-எஸ்.ஜானகி..
**IX-A Std -**
**GOOD SHEPHERD M.H.S.SCHOOL**



# தேனும்-நெய்யும் சேர்ந்தால் நஞ்சு!



வாழைப் பழத்தைத் தயிர், மோருடன் கலந்து சாப்பிடக் கூடாது. வாழைப்பழம் சாப்பிட்ட உடனும், தயிர், மோர் சாப்பிடக்கூடாது.

பழங்களைத் தனியேதான் சாப்பிட வேண்டும். சாப்பாட்டுடன் சேர்த்து சாப்பிடக்கூடாது. அதன் தாதுச்சத்து உணவுடன் கலந்து பலனற்றுப் போய்விடும்.

வெண்ணெயுடன் காய்கறிகளைச் சேர்த்துச் சாப்பிடக்கூடாது.

மீன், கருவாடு சாப்பிட்ட உடன் பால், தயிர் சாப்பிட்டால் "வெண் மேகம்" போன்ற நோய்கள் வர வாய்ப்பு உள்ளது.

உடல் மெலிந்தவர்கள், புழுங்கலரிசி சாதம் சாப்பிட வேண்டும்.

உடல் பருத்தவர்கள் கோதுமை உணவு உண்பது நல்லது.

ஆஸ்துமா உள்ளவர்கள், சளி அதிகம் உள்ளவர்கள் தக்காளி, பூசணிக்காய், முள்ளங்கி ஆகியவற்றைச் சாப்பிடக்கூடாது.

மூல நோய் உள்ளவர்கள் முட்டை, அதிக காரம், மாமிச உணவு ஆகியவற்றை உண்ணக்கூடாது.

நெய்யை வெண்கலப் பாத்திரத்தில் வைத்து உபயோகிக்கக்கூடாது.

காலையில் வெறும் வயிற்றில் காபி, டீ குடிக்கக்கூடாது. ஒரு டம்ளர் தண்ணீர் குடித்து விட்டுப் பின்னர், குடிக்கலாம்.

அல்சர் உள்ளவர்களும், மஞ்சள் காமாலை உள்ளவர்களும் மிளகாய், ஊறுகாய் ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது.

பெண்கள் மாதவிடாய் நாட்களில் கத்தரிக்காய், எள், அன்னாசி, பப்பாளி ஆகியவற்றைச் சேர்த்து கொள்ளக் கூடாது.

தேனும், நெய்யும் சம அளவில் கலந்தால் நஞ்சாகிவிடும். எனவே இரண்டையும் சேர்த்து உண்ணக் கூடாது.

தோல் நோய் உள்ளவர்கள் கத்தரிக்காய், புடலங்காய், நிலக்கடலை, மீன், கருவாடு, அதிக காரம், அதிக புளிப்பு, கொத்தவரங்காய், பீன்ஸ் ஆகியவற்றைச் சாப்பிடக்கூடாது.

கோதுமையை நல்லெண்ணெயுடன் சமைத்துச் சாப்பிடக்கூடாது.

**சுஜாதா மூர்த்தி**

# நீங்களும் நிர்வாகியாகலாம்

தொடர் -3

**நிர்வாகியாக ஆசையா?**

நிர்வாகியாக வேண்டும் என்ற ஆசை அல்லது கனவு உங்களில் பலருக்கும் இருக்கும்.


நாம் மருத்துவமனையிலோ, அரசாங்க அலுவலகத்திலோ அல்லது பல்கலைக் கழகத்திலோ வேலை பார்க்கிறோம் என்றால் அங்கு வந்து போகும் பல்வேறு விதமான மக்களை நாம் கையாள வேண்டி வரும். அவர்களுக்கு புரிய வைக்கும் பணியை எந்த விதத்திலாவது மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை உண்டாகும். மேலும் குடும்பத்தை நிர்வகிப்பது, விளை யாட்டிற்கு தலைமைப் பொறுப்பேற்று விழா ஏற்பாடு செய்வது போன்ற பல நிகழ்வுகளில் ஒவ்வொருவருமே நிர்வ ாகப் பொறுப்பை வகித்து வந்திருப்பீர்கள்.

நீங்கள் மற்றவர்களுக்குக் கீழே பணிபுரிந்தாலும் இப்படி வேலைக்கு அப்பாற்பட்ட சில விஷயங்களை நிர்வகிக்கும் சூழ்நிலை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டாகும். இத்தகைய விஷயங்களை ஒவ்வொருவரும் நிர்வாகிக்கும்போது, அதன் மூலமாகப் பல்வேறு அனுபவங்களைப் பெறலாம்.

இப்படி முக்கியத்துவம் வாய்ந்த நிர்வாகப் பொறுப்பை வாழ்வின் பல சந்தர்ப்பங்களில் நாம் ஏற்று வரலாம். வீடு அலுவலகம், விளையாட்டு மைதானம், மார்க்கெட்... போன்ற பல இடங்களில் ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு நிர்வாகப் பொறுப்பை ஏற்கும்போது அதற்கு நாம் தகுதி வாய்ந்தவரா என்ற கேள்வி நமக்குள் எழும்.

**கண்டிப்பாகத் தகுதி வாய்ந்தவர்தான்.**

இன்றைய சூழ்நிலையில் நிர்வாகம் என்பது கடவுள் கொடுத்த பரிசு என்றுதான் சொல்ல வேண்டும்.




எந்த ஒரு நிர்வாகியும் பிறக்கும் போதே நிர்வாகி என்ற அடையாளத் தோடு பிறப்பதில்லை. நிர்வாகி என்னும் பதவி அதிர்ஷ்டத்தால் கிடைப்பதும் இல்லை.

இது முழுக்க முழுக்க அவரவருடைய தனிப்பட்ட திறமையின் மூலம் கிடைப்ப தாகும். ஒரு குழுவாக விளையாடும் வீரர்களில் ஏன் ஒருவரை மட்டும் குறிப்பிட்டு அவரை கேப்டன் ஆக்குகிறார்கள்? அவர் நன்றாக விளையாடக் கூடியவர் என்பது மட்டுமல்ல. அவர் தனது குழுவினரை வழிநடத்திச் செல்லுபவரா என்ற தகுதியும் ஆராயப்பட்டே அவருக்கு கேப்டன் என்ற நிர்வாகப் பதவி அளிக்கப்படும்.

அப்படி நிர்வாகப் பதவி கிடைத்ததும் அதைச் சரியாகப் பயன்படுத்தும் திறனும், தைரியமும் எவருக்கு இருக்கிறதோ அவரே வெற்றி கரமான நிர்வாகியாகிறார். ஒரு நிர்வாகி மேம்படுவதும், இன்னும் பல சிகரங்களைத் தொடுவதும் அவரவர் கையில்தான் உள்ளது. ஒரு மனிதர் நல்ல அறிவு படைத்தவராக எதையும் எளிதில் புரிந்து கொள்பவராக, நல்ல சிந்தனை யுடையவராக இருந்தால் மட்டும் போதாது. தைரியமானவராகவும், தன்னம்பிக்கை நிறைந்தவராகவும் இருக்க வேண்டும். அப்படிப் பட்ட வரால் மட்டுமே வெற்றிகரமான நிர்வாகியாக முடியும் என்பது White Stage எனப்படும் அமெரிக்க

## சாணக்கியர் சொல்

தங்களுக்கு வரவேண்டிய பதவி உயர்வு வரவில்லை என்றும், தங்களது உழைப்பை மேலதிகாரிகள் கண்டு கொள்வது இல்லை என்றும் பலர் புலம்புவதைக் காண்கிறோம்.

உங்கள் வாழ்க்கை உயர்வதற்கு முதலாளியோ மேலதிகாரியோ பொறுப்பல்ல. நீங்கள் பெறும் அனுபவமே காரணமாகும்.

நாம் வளர வேண்டு மானால் தொடர்ந்து கற்றுக் கொண்டே இருக்க வேண்டும் நேர மில்லையே என்று புலம் பாதீர்கள். சாணக்கியரின் ஆலோசனை களைப் பாருங்கள்.

“பகல் மற்றும் இரவின் மிச்சப் பகுதிகளின் போது அவன் புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்.” மேலும் ஏற்கனவே கற்றுக் கொண்டதைப் பரிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மாலை மற்றும் இரவு நேரங்களில் பயனற்ற பொழுது போக்குகளில் ஈடுபடுவதைவிடப் புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்ளுங்கள் என்று சாணக்கியர் சொல்கிறார்.

நிர்வாக இயல் பயிற்சி நிறுவனம் ஒன்றின் ஆராய்ச்சியாளர்கள் தரும் கருத்தாகும்.

**நவீன கோட்பாடுகள் :**

நிர்வாகம் என்பதைப் பற்றியும்



நிர்வாகியைப் பற்றியும் பல்வேறு ஆராய்ச்சிகள் கடந்த நூறு ஆண்டுகளில் நடைபெற்றுள்ளன. அதன் விளைவாகப் பல்வேறு கோட்பாடுகளும் வெளியிடப் பட்டு உள்ளன. ஒரு நிர்வாகிக்கு எப்படிப் பட்ட தகுதிகள் இருக்க வேண்டும் என்பதைப் பற்றிய தெளிவான கருத்துக்கள் கடந்த அறுபது எழுபது ஆண்டுகளுக்குள் உருவாக்கப் பட்டுள்ளன. எந்தவொரு நிறுவனத் திலும் நிர்வாகியின் நடவடிக்கை முக்கியமான ஒன்றாகும்.

எல்லா விதத்திலும் அவர் சிறப்பாகச் செயல்பட்டால் மட்டுமே நிர்வாகமும் சீராக இருக்கும். அத்துடன் நிர்வாகி என்பவர் எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளக்கூடிய திறமை பெற்றவராக இருக்க வேண்டும்.

விசேஷகுணக் கோட்பாடு

XY கோட்பாடுகள்

நவீன கோட்பாடு

இலக்குக் கோட்பாடு

**தொடரும்**


ஆண்டு சந்தா ரூ-240

**மித்ரா டைம்ஸ் மாத இதழ்**

**சந்தா படிவம்**




பெயர் :.............................................................................

முகவரி :.............................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

மாநிலம் :.............................................................................

தொலைபேசி :.............................................................................

கைபேசி :.............................................................................

மின்னஞ்சல் :.............................................................................

காசோலை & டி.டி. விவரம்:

எண் :.............................................................................

வங்கி :.............................................................தேதி.................

தொகை :.............................................................................

**அனுப்ப வேண்டிய முகவரி :**

மித்ரா டைம்ஸ் மாத இதழ்

#602, ஸ்ருதி பிளாக், சித்ரா அவென்யூ, 9, சூளைமேடு ஹைரோடு,

சென்னை-600 094. போன்:044-23744662, 23743007.








# அற்புத மூலிகைகளின் மலை

## -கொல்லிமலை

இயற்கை வளம் மிக்க மலை. இது இந்தியாவின் தெற்கு பகுதியில், தமிழ்நாட்டின் நடுப்பகுதியில், நாமக்கல் திருச்சி மாவட்டத்தின் எல்லையாக அமைந்துள்ள ஒரு சிறிய மலைத் தொடராகும்.

கொல்லி மலை கிழக்கு தொடர்ச்சி மலையின் கடைசி மலையாக அமைந்துள்ளது. கிழக்குத் தொடர்ச்சி மலை பெயருக்கேற்றார்ப் போல் தொடர்ச்சியாக இல்லாமல் அங்கங்கே விட்டு இருக்கும். மேற்குத் தொடர்ச்சி மலை அவ்வாறின்றி தொடர்ந்தும் அடர்ந்தும் காணப்படும். பற்பல நதிகள் இந்த கிழக்குத் தொடர்ச்சி மலையை ஊடறுத்து ஓடுவதால் தொடர்ச்சியாக இருக்க முடிவதில்லை போலும். கொடிய நோய்களையும் கொல்லும் அற்புத மூலிகைகள் கொண்டும் அழகுற விளங்குகிறது கொல்லி மலை.

நாமக்கல்லில் இருந்து 55 கி.மீ தொலைவிலும் கடல் மட்டத்தில் இருந்து 1000 முதல் 1600 மீட்டர் உயரமும் உள்ள இம்மலை வடக்கு தெற்காக 28 கி.மீ பரப்பளவும், கிழக்கு மேற்காக 19 கி.மீ பரப்பளவும், மொத்தத்தில் 441.4 சதுர கி.மீ பரப்பளவும் கொண்டுள்ளது. கொல்லிமலைக்கு நாமக்கல், சேந்தமங்கலம், இராசிபுரம் மற்றும் சேலம் நகர்களில் இருந்து அரசுப் பேருந்து மற்றும் தனியார் பேருந்து வசதி உள்ளது. நாமக்கல்லிலிருந்து கொல்லி மலைக்கு 43 இருக்கைகள் கொண்ட சிறிய பேருந்து (Mini Bus) செல்கிறது.

மலைப்பாதையின் தூரம் 26 கி.மீ. செங்குத்தான இம்மலைப்பாதையில் 70 கொண்டை ஊசி வளைவுகள் (Hair Pin Bend) உள்ளதால் அடிவாரத்தில் உள்ள காரவள்ளி வரை மட்டுமே பெரிய பேருந்துகளும் பெரிய வண்டிகளும் செல்ல முடியும். சில கொண்டை ஊசி வளைவுகள் மிகவும் அபாயமான வளைவுகளை கொண்டிருப்பதால் தேர்ந்த ஓட்டுனர்களே

பேருந்துகளையும் சுமையுந்துகளையும் ஓட்டிச்செல்வர். கார், வேன்களில் சுற்றுலா செல்வோரும் மலைப்பாதையில் கவனமாக செல்வது நன்று. இம்மலைப் பாதை, மழைக்காலத்திற்கு ஏற்றதன்று. 2 அல்லது 3 கொண்டை ஊசி வளைவுகளுடன் அபாயமற்ற மாற்று மலைப்பாதை அமைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

கொல்லிமலைக்குச் செல்ல முக்கியமாக இரண்டு பாதைகள் உள்ளன. ஒன்று நாமக்கல் சேந்தமங்கலம் வழியாக கோம்பை காடு என்னும் ஊர் வழியாக செல்ல வேண்டும். கோம்பையிலிருந்து 12 மைல் தூரம் சென்று அறப்பளீஸ்வர சுவாமி கோயிலை அடையலாம்.

மற்றொன்று கொப்பம்பட்டி வைரிசெட்டிப்பாளையம் வழியாக புளியஞ்சோலை சென்று அங்கிருந்து 5 மைல் தூரம் சென்றபின் மலையேறும் தரைமட்டத்தில் இருந்து 2 மைல் சென்று அறப்பளீஸ்வர சுவாமி கோயிலை அடையலாம்.

இம்மலை சுமார் 40 சதுர மைல் (280 சதுர கிமீ) நிலப்பரப்பும், 5000 க்கும் மேல் உள்ள ஜனத்தொகையையும், 85 கிராமங்களையும் கொண்டது. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைவாகவே இருப்பதால், கொல்லி மலை இன்றும் இயற்கை அழகுடனே விளங்குகிறது. இம்மலைமீது பல ஊர்கள் உள்ளன. இங்குள்ள பலவூர்களிலும் மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அந்த மலையிலே வாழும் பூர்வகுடிகள் மலைவாழ் மக்கள் என்றும், மலைக்கௌண்டர்கள் என்றும் அழைக்கப் படுகின்றனர்.

இந்தியாவிலேயே கரடிகள் இந்த பகுதியில் மிக அதிகம். அந்தக் கொல்லி மலையில் மரங்களில் பாம்புகள் தலை கீழாகத் தொங்கியபடி இருக்கும் காட்சியை காணலாம், பலாப்பழம், அன்னாசி, பேரிக்காய், கொய்யா, மாம்பழம், காப்பி, அதிகம் விளைகிறது, மான்களும், மயில்களும் ஆங்காங்கே சுற்றித் திரியும்.

கொல்லிமலையில் இருந்து **சுவேதா நதியும், கோம்பை ஆறு, அய்யாறு, கூட்டாறு, கருவோட்டாறு, கல்லக்குழி யில் பஞ்ச நதி** போன்ற ஆறுகள் உற்பத்தியாகி நாமக்கல் மாவட்டத்தின் பல்வேறு ஏரிகளை நிரப்பி காவிரி ஆற்றில் கலக்கின்றது. கொல்லிமலையில் நீர் ஊற்று நிறைந்த இடங்கள் அதிகம் காணப்படுகின்றன. இங்குள்ள குன்றுகளில் தேன் கூடுகளைக் காணலாம்.

இம்மலைக் காடுகளில் நிலவிய கடுமையான சூழலின் காரணமாக, இம்மலைப் பிரதேசத்துக்கு கொல்லிமலை என்ற பெயர் வந்தது. கொல்லி எனப்படும் வானலாவிய மரங்களை உடையதாலும், மும்மலைகளையும் முனைப்பையும் கொல்வதாலும் இம்மலை கொல்லிமலை எனப்பட்டது என்றும் சொல்லுவதுண்டு. பல நூற்றாண்டுகளுக்கு முன் இங்கு கொல்லிவாய்ப் பறவைகள் அதிகம் வசித்தால் இது கொல்லி மலை என்று பெயர் பெற்றது என்றும் கூறுவர். நான்கு புறமும் சதுர வடிவில் மலைகளால் சூழப்பட்ட பகுதியாக உள்ளதால் இது சதுரகிரி எனவும் அழைக்கப்படுகிறது.



**“வேலைக்கு தினமும் அரை மணி, முக்கால் மணி லேட்டாவே வரீங்களே ... ஏன்?”**


**“நீங்கதானே, வேலைன்னு வந்துட்டா டைம் பார்க்கக் கூடாது’ ன்னு சொன்னீங்க”!!!**



**வரலாற்று சிறப்புமிக்க அறப்பளீஸ்வரர் கோயிலின் அருகில் ஆகாய கங்கை நீர் வீழ்ச்சி உள்ளது. நீர் வீழ்ச்சிக்குச் செல்ல 720 படிகட்டுகள் உள்ளன. இங்கு தமிழக அரசின் சுற்றுலாத்துறை படிக் கட்டுகள் அமைத்துள்ளது.** 160 அடி உயரத்தில் இருந்து நீர்வீழ்ச்சி விழுகிறது. இந்த நீர்வீழ்ச்சியில் குளித்தால் பல்வேறு நோய்கள் தீருவதுடன் உடல் ஆரோக்கியம் அடைகிறது. நீர்வீழ்ச்சியில் இருந்து வெளிவரும் நீரானது கிழக்கு நோக்கி பாய்ந்து திருச்சிராப் பள்ளி மாவட்டத்தின் புளியஞ்சோலை பகுதியை அடைகிறது.

கோயிலுக்கு முன் நீர்வீழ்ச்சிக்கு செல்லும் நீரோடை உள்ளது. அந்த காலத்தில் நீரோடையில் ஏராளமான மீன்கள் துள்ளி குதித்து விளையாடியதாம். கோயிலுக்கு வரும் பக்தர்கள் குழந்தை வரம் வேண்டி மீனைப் பிடித்து அதன் மூக்கில் தங்க கம்பியை பொருத்துவார்களாம். அப்படி மீனுக்கு முள் குத்தி விடுபவர்களுக்கு அந்த ஆண்டே குழந்தை பிறக்கும் என்று கூறப்படுகிறது.

மலைவாசிகள் அறப்பளீஸ்வரரை குல தெய்வமாக வணங்குகிறார்கள். மைசூர் சுவாமிகள் என்று அழைக்கப்படும் நாதநந்த யோகியின் சமாதி கோயிலுக்கு மேற்கில் இருக்கிறது. கோயிலுக்கு வடக்கில் பஞ்ச நதி ஆறு ஓடுகிறது. காடுகளும் சோலைகளும் நிறைந்த அப்பகுதியில் இயற்கையின் காட்சி கண் கொள்ளாதது. கோயிலுக்கு நேர் கிழக்கில் மைல் கீழே பயங்கரமான பாதை வழியில் இறங்கிப் போனால் 160 அடி உயரத்தில் இருந்து ஆகாய கங்கை அருவி விழுவதைப் பார்க்கலாம்.



**இவன் என்ன நினைப்பான் அவன் என்ன நினைப்பான்னு நினைச்சே வாழ்றோம். ஆனா உண்மையில *ஒருத்தனும் நம்மளைப் பத்தி நினைக்கிறதேயில்ல!***

**-நிதர்சனம்**

அந்த அருவி நீர் பாயும் ஓடை வழியாகச் சென்றால் ஒரு சிறு செங்குத்தான குன்றும் அதனுள் குகையையும் காணலாம். இது கோரக்கர் குகை எனப்படுகிறது. குகைப் பக்கத்தில் தென்புறம் ஒரு அகழி இருக்கிறது. இது கோரக்கர் குண்டம் என அழைக்கப் படுகிறது. இங்கு கோரக்கர் என்னும் சித்தர் தன் மாணவர்களுடன் கூடி தவம் இருந்ததாகக் கூறப்படு கிறது. இந்த குகையைச் சுற்றிப் பல அரிய மூலிகை களைக் காணலாம்.

அறப்பளீஸ்வரர் கோயிலில் இருந்து வட பக்கம் 3 மைல் தூரத்தில் சோரம் அடையான் கோயில் உள்ளது. இது மலைவாசிகளால் வணங்கப்பட்ட முந்தைய தெய்வம் என கருதப்படுகிறது. இந்த கோயிலில் இருந்து மேற்குப்புறம் 1 மைல் தூரத்தில்தான் கொல்லிப்பாவை என்னும் சிலை உள்ளது.

இங்கிருந்து கிழக்கு நோக்கி 2 மைல் சென்றால் அங்கு ஒரு குன்றின் மீது பெரியண்ண சுவாமி கோயில் இருக்கிறது.



தரை மட்டத்தில் இருந்து 300 அடி உயரத்தில் பழைய காலத்து குயவன் மண் ஓடுகளால் கோயிலும், மண்ணினால் செய்யப்பட்ட குதிரை சிலை வாகனத்தில் அமர்ந்து கையில் திரிசூலம் ஏந்தி வேட்டைக்குச் செல்லும் பாணியில் பெரியண்ண சுவாமி சிலையும் காட்சியளிக்கிறது.

இங்கு பல சித்தர்கள் வாழ்ந்தார்கள். இன்றும் இங்கு சித்தர்களைக் காணலாம். ஔவையார் முதல் 18 சித்தர்களும் இம்மலையில் வாழ்ந்ததாக வரலாறு கூறுகிறது. இதற்கு ஆதாரமாக குகைகளும் காணப்படுகிறது. சித்தர்கள் இங்குள்ள மூலிகைகளின் பயன்களை அறிந்து அவற்றை மக்கள் பயன்படுத்தும் விதத்தில் ஓலைச் சுவடியில் எழுதி வைத்துள்ளனர்.

நவபாஷாண சிலைகள், மூப்பு பலவித விலை மதிப்புள்ள கற்கள் இம்மலையில் இன்றும் காணப்படுகிறது. இம்மலையில் உள்ள மூலிகைகள் தவிர பதினெண்கீழ் சித்தர்களால் தயார் செய்யப்பட்ட பல அரிய மருந்துகள், தைலம், ரசமணி, மூப்பு, சுண்ணம் இவைகள் கல்லறைகளில் புதை பொருளாக வைக்கப்பட்டிருப்பதாக காலங்கி நாதர் மலைவளம் என்னும் நூலில் குறிப்பிட்டு உள்ளார்.

கொல்லிமலை ஒரு காலத்தில் மூலிகைகளின் சொர்க பூமியாகத் திகழ்ந்தது. மருத்துவ குணம் வாய்ந்த அரிய வகை மூலிகைகள் அடர்ந்த காட்டுப் பகுதியிலும் நீர் கசிந்து கொண்டு இருக்கும் இடங்களிலும் காணப்படுகிறது. இம்மூலிகைகள் தானே வளர்ந்து பின்னர் அழிந்து வளரும் தன்மை கொண்டது. இந்த மூலிகைகளை மாந்திரீக தன்மை வாய்ந்ததாக கருதி மலைவாழ் மக்கள் பயன்படுத்துகிறார்கள்.

மருத்துவ குணம் வாய்ந்த மூலிகைகளான வேலால் தாக்கப்பட்ட புண்ணை ஆற்றும் சாவல்யகரணி, துண்டிக்கப்பட்ட பாகங்களை ஒன்று சேர்க்கும் சந்தான கரணி, ஜோதி விருட்சகம், சாயா விருட்சகம், அழுகுண்ணி, தொழுகண்ணி போன்ற மூலிகைகள் இங்கு மட்டுமே காணப்படும் அரிய மூலிகைகளாகும். இம்மலையில் மூலிகையைத் தேடி வரும் யாவரும் கொல்லிப்பாவையை வணங்கியே செல்ல வேண்டும் என சொல்லப்படுகிறது.

இம்மூலிகைகளுக்கும் அரிய மருந்துகளுக்கும் காவலாக கொல்லிப்பாவை பெரியண்ண சுவாமி என்னும் தெய்வங்களை அமைத்து வைத்திருப்பதாக சித்தர் நூலால் அறிகிறோம்.

*எம்.எஸ்.மூர்த்தி*







மனிதனின் பேச்சு வேகம், நிமிடத்துக்கு 160 சொல். எழுதும் வேகம் ஒரு நிமிடத்துக்கு 60 சொல். ஆகவே, பேச்சை வேகமாகக் குறித்துக் கொள்ள சில குறியீடுகள் தேவைப்பட்டன. அந்தக் குறியீடுகளின் தொகுப்புதான். சுருக்கெழுத்து என்பது.

கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க அறிஞர் சிசரோவின் செயலராக டைரோ என்பவர் இருந்தார். சிசரோவின் பேச்சுகளைக் குறித்துக் கொள்ள டைரோ சில குறியீடுகளைப் படைத்துக் கொண்டார். இதுதான் சுருக்கெழுத்தின் தொடக்கம். கி.பி. 400க்குள் இந்த குறியீடுகள் 13 ஆயிரமாக பெருகிவிட்டன. ஒலி அடிப்படையில் 1588ல் பிரைட் என்ற ஆங்கிலேயர் சில குறியீடுகளைக் கண்டு பிடித்தார். 1837ல் பிட்மன் முதல் சுருக்கெழுத்து நூலை வெளியிட்டார். **'பிட்மன் முறை'**

# மொழியின் வரலாறு

**தொடர் 4**

**-எம்.எஸ் மூர்த்தி**

என்று இது புகழ் பெற்றது.

அமெரிக்கா போன்ற நாடுகளில் "கிரெக் முறை" பெருமளவில் நடைமுறையில் இருக்கிறது.

1888-ல் கிரெக் என்ற ஆங்கிலேயர் படித்த முறை இது.

வேலூர் காவலர் பயிற்சிப் பள்ளியில் சுருக்கெழுத்து ஆசிரியராக இருந்த எம்.சீனிவாசன் 1910-ல் தமிழ் சுருக்கெழுத்துகளைப் படைத்தார். தஞ்சை சுருக்கெழுத்தாளர் பி.ஜி.சுப்பிரமணியம் 1939-ல் வேறு முறையை உண்டாக்கினார். செய்தியாளர்களுக்கு சுருக்கெழுத்து தெரிந்திருக்க வேண்டும் என்று ஒரு காலத்தில் வற்புறுத்தினார்கள். ஆனால் ஒலிப்பதிவு நாடா வந்த பின்பு சுருக்கெழுத்தின் தேவை குறைந்து விட்டது.

**எழுத்தும் ஒலியும்**

ஒலி எழுத்து வாய்வழியே பிறக்கிறது. செலவு இல்லாதது. இக்காலத்தில் எழுத்து வடிவம் காண வேண்டுமானால் மூன்று பொருட்கள் முக்கியமானவை. ஒன்று எழுதுகோல் மற்றொன்று எழுதும் தாள். மூன்றாவது மை, அதாவது தாள், கோல், மை மூன்றும் இருந்தால்தான் வரிவடிவம் பிறக்கும்.

தொடக்க கால மனிதன் இயற்கையாகக் கிடைத்த வண்ணக் கட்டிகளையும், கரிக்கட்டைகளையும் எழுதுகோலாக பயன்படுத்தினான். பாறைகளில் எழுத அவை பயன்பட்டன. பின்பு உளியைப் பயன்படுத்தினான்.

ஏடுகளில் எழுதக் கூர்மையான எல்லாப் பொருள்களையும் பயன் படுத்தினார்கள். கல், முள், எலும்பு, தந்தம், இரும்பு, பித்தளை, சங்கு, மூங்கில், பறவை, இறகுகள் என்று எத்தனையோ பொருள்கள் பயன்படுத்தப்பட்டன. **வியாசர் சொல்லச் சொல்ல பாரதத்தை எழுத விநாயகர் தனது தந்தத்தை ஒடித்துப் பயன்படுத்தினார் என்பது கதை.**

பனை ஓலைகளில் எழுத முதலில் கற்றாழை முள்ளும், கருவேலம் முள்ளும் பயன்பட்டன. பிறகு எழுத்தாணி வந்தது. ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டு காலமாக எழுத்தாணியே தமிழர்களின் எழுதுகோலாக இருந்தது. தமிழில் அச்சும், மைக்கோலும் வந்த பிறகுங்கூட வெகுகாலம் வரை தமிழர்கள் எழுத்தாணியைக் கைவிடவில்லை. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை எழுத்தாணி பயன்பட்டது.

மேலை நாட்டார் எழுதுகோலை 'பென்' என்று கூறுகிறார்கள். 'பென்னா' என்ற இலத்தீன் சொல்லுக்கு இறகு என்று பொருள். தொடக்க காலத்தில் எழுதுவதற்கு அவர்கள் இறகுகளைப் பயன்படுத்தினார்கள்.

தமிழர்கள் எழுத்தாணி கொண்டு எழுதிய காலத்தில், எகிப்தியர்கள் காரீயம் கொண்டு எழுதினார்கள். அதன் வளர்ச்சிதான் (கரிக்கோல்) பென்சில். **நாடகத்தந்தை பம்மல் சம்பந்த முதலியார் தமது புகழ்பெற்ற நாடகங்களைப் பென்சில் மூலம் எழுதினார்** என்று கூறுவதுண்டு. மை ஊற்றி எழுதும் எழுத்தாணிகள் வந்த பிறகு, கரிக்கோலின் பயன் குறைந்துவிட்டது. இப்பொழுது பள்ளிப் பிள்ளைகளும், கணக்குப் பிள்ளைகளும், ஓவியர்கள் மட்டுமே கரிக்கோலைப் பயன் படுத்துகிறார்கள்.

வரிவடிவம் தோன்றிய நாளிலிருந்து இன்றுவரை எழுதுவதற்கும், அச்சிடவும் மைதான் பயன்படுத்தப் படுகிறது. எழுது கருவிகள், ஏடுகளில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டும் மை மட்டும் அப்படியே இருக்கிறது. '**மை**' என்றால் **கருமை** என்று பொருள் கருத்த கூந்தலை '**மையிருங் கூந்தல்**' என்றும், கன்னங்கரேல் என்ற இருளை '**மையிருட்டு**' என்றும் சொல்லுவார்கள். ஆனால் இப்பொழுது வண்ண மைகளும் வந்துள்ளன.

குகை மனிதன் இலை தழைகளின் சாற்றை மையாகப் பயன்படுத்தினான். கரித்துண்டும் கரும்புகையும் மை தயாரிக்கப் பயன்பட்டன. மைக்கூடுகளில் மையை அடைத்து வைத்து, எழுது கோலால் தொட்டு எழுதினார்கள். கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முந்தைய மொகஞ்சதாரோவில் மைக்கூடுகள் கிடைத்தன. சிந்துவெளியைச் சேர்ந்த இந்த நகரில் அந்த நாளில் தமிழர்கள் வாழ்ந்தார்கள்.

எழுதுவதற்குப் பாலையும், குருதியையும் கூடப் பயன்படுத்துவது உண்டு. இன்றும் சிலர் இரத்தக் கையெழுத்து போடுகிறார்கள். தாங்கள் கொண்ட கொள்கையில் உறுதிப்பாட்டை காட்ட ஆவேசமாக ரத்தக் கையெழுத்து போடுவதுண்டு. தங்களது சோக நிலையை வெளிப் படுத்துவதற்கு '**கண்ணீரில் எழுதுகிறேன்**' என்று சொல்வதுண்டு.

எழுத்து மை தயாரிக்கக் கடுக்காய், அவுரி இலை, மருதாணி இலை, முதலியவை பயன்படுத்துகின்றன. அச்சு மை தயாரிக்க ஒரு வகைக் கரியைப் பயன்படுத்துகிறார்கள்.

**-தொடரும்**



## அம்மா தலைமையில் தாய் கழகத்தில் இணைந்த "நெல்லை கானா"

எம்.ஜி.ஆர்.காலத்தில் 25 வயதில் ஆலங்குளம் எம்.எல்.ஏ.வாக இருந்து திருநெல்வேலி மாவட்டத்தை அ.தி.மு.கவின் கோட்டையாக மாற்றியவர் கருப்பசாமி பாண்டியன். பாளையங்கோட்டை, தென்காசி தொகுதிகளிலும் எம்.எல்.ஏவாக இருந்துள்ளார். தவிர்க்க இயலாத காரணத்தால் அ.தி.மு.கவை விட்டு வெளியேறிய நெல்லை கருப்பசாமி பாண்டியன். தி.மு.க.வில் சேர வேண்டிய தாயிற்று.

தி.மு.கவில் அவர் இருக்கும் போது அ.தி.மு.க.வில் இருந்த மகிழ்ச்சியான மனநிலை இல்லை. எனவே தாம் மீண்டும் அ.தி.மு.கவில் சேர்வது தான் தன்னுடைய அரசியல் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்கிக் கொள்ள முடியும் என்று முதலமைச்சர் அம்மாவிடம் விண்ணப்பித்திருக்கிறார்.

மகிழ்ச்சியோடு அதை அங்கீகரித்து தனது முன்னிலையில் முதலமைச்சர் ஜெயலலிதா மீண்டும் அவரை அ.தி.மு.க.வில் சேர அனுமதித்தார். இனி நெல்லை மாவட்டம் நெல்லை கானா அண்ணாச்சி முயற்சியால் அ.தி.மு.கவின் கோட்டையாக வலுப்பெறும்.

**கபாலிகான்**
ஆலங்குளம்




## 69-வது சுதந்திர தினம்

# சுதந்திர போரின் துவக்கம்

ஆங்கிலேயருக்கு எதிராக முதன் முதலில் தமிழகத்தின் போராட்டம் துவங்கியது. "முதல் சுதந்திரப் போர்" என்று அழைக்கப்படும் சிப்பாய்க் கலகம், தற்போதைய உத்தரப் பிரதேச மாநிலம் மீரட் என்ற இடத்தில் 1857ஆம் ஆண்டு நடந்தது. அதற்கு 50 ஆண்டுகளுக்கு முன்பே 1806ஆம் ஆண்டு தமிழகத்தின் வேலூரில் சிப்பாய் கலகம் நடந்தது.

1805ஆம் ஆண்டு இந்தியச் சிப்பாய் களுக்கு புதிய சீருடை மாற்றம் செய்து ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் சென்னை கமாண்டர் சர் ஜான் கிராட்டாக் (Sir John Craddock) உத்தர விட்டார். தலைப்பாகைக்கு பதிலாக வட்ட வடிவத் தொப்பி அணியச் சொன்னார். ஹிந்து சமய அடையாளங்களை நெற்றியில் அணிந்து கொள்ள தடை விதித்தார். இவற்றை இந்திய ஹிந்து சிப்பாய்கள் எதிர்த்தனர். இந்திய இஸ்லாமியச் சிப்பாய்கள் தாடியை எடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டதால் அவர்களும் கோபமடைந்தனர். எதிர்த்த சிப்பாய்கள் சென்னை புனித ஜார்ஜ் கோட்டைக்கு (St. George Fort) அனுப்பப்பட்டனர். பகிரங்கமான எதிர்ப்புத் தெரிவித்த இரண்டு சிப்பாய்களுக்கு 900 கசையடி கொடுத்து வேலையிலிருந்து நீக்கினர். 19 சிப்பாய்களுக்கு தலா 500 கசையடி கொடுத்தனர். இது சிப்பாய்கள் மத்தியில் கடுங்கோபத்தை ஏற்படுத்தியது.

1799 ஆம் ஆண்டு ஸ்ரீரங்கப் பட்டினத்தில் (Srirangapattinam) தோற்ற திப்பு சுல்தானின் மகன்களை பிரிட்டிஷார் வேலூர் கோட்டையில் தான் சிறை வைத்திருந்தனர். அவர்கள் தான் இந்தக் கலகத்திற்கு ஏற்பாடுகளை செய்தனர். ஜூலை 09, 1806 அன்று திப்புசுல்தானின் மகளுக்கு இந்தக் கோட்டையில்தான் திருமணம் நிச்சயிக்கப் பட்டது. திருமணத்தில் கலந்து கொள்வதுபோல் நடித்து, அன்றே புரட்சி செய்வது என்று தீர்மானிக் கப்பட்டது.


திப்பு சுல்தான்

அன்று அதிகாலை 2.00 மணிக்கு திடீரென தாக்குதல் நடத்திப் புரட்சியாளர்கள் பிரிட்டிஷ் சிப்பாய் களைக் கொன்றனர். விடிவதற்குள் ஒட்டு மொத்தக் கோட்டையையும் தங்கள் வசம் கொண்டு வந்து கோட்டையின் உச்சியில் மைசூர் கொடியைப் பறக்கவிட்டனர். உடனே அங்கு திப்பு சுல்தானின் மகன் ஃபதே அலி ஹைதரை (Fathe Ali Haider) மன்னராகவும் அறிவித்தனர்.

அதேசமயம்-அங்கிருந்த ஒரு பிரிட்டிஷ் அதிகாரி எப்படியோ தப்பி ஆற்காடு சென்று தன் அதிகாரிகளிடம் நடந்த விஷயத்தைச் சொல்லிவிட்டார். உடனே பரபரப்படைந்த பிரிட்டிஷ் அதிகாரி சென்னை தலைமைப் பிரிவுக்குத் தகவல் சொல்ல- ஆற்காடு படைகளும் சென்னைப் படைகளும் 9:00 மணி நேரத்திற்குப் பின்னர் வேலூர் வந்து சேர்ந்தன. ஆற்காடு படைத்தளபதி கில்லஸ்பி, கயிறு மூலம் வேலூர்க் கோட்டை மீது ஏறி கண்ணில் கண்ட புரட்சியாளர்களை எல்லாம் சுட்டுத் தள்ளினான். அவனைத் தொடர்ந்து கோட்டைக்குள் புகுந்த பிரிட்டிஷ் சிப்பாய்களும் துப்பாக்கி வேட்டை நடத்தினர்.

சரணடைந்த 100 புரட்சியாளர்களை கோட்டைச் சுவர் முன் வரிசையாக நிற்க வைத்து சரமாரியாகச் சுட்டுக் கொன்றனர். மொத்தம் அன்றைய வேட்டையில் 350 புரட்சிச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். பிரிட்டிஷ் தரப்பில் 200 வீரர்கள் பலியாகி இருந்தனர். அங்கிருந்த திப்பு சுல்தானின் வாரிசுகள் கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டனர்.

இந்தப் புரட்சி இந்திய வீரர் களுக்கு வெற்றியாக அமையவில்லை என்றாலும் அவர்களுக்கு உரிய மதச் சின்னங்களை தடை செய்ததை பிரிட்டிஷார் விலக்கிக் கொண்டனர். இந்திய வீரர்கள் மத்தியில் பிரிட்டிஷாரின் அடக்குமுறை மீதான விழிப்புணர்வை இந்தப் புரட்சி ஏற்படுத்தியது. மேலும். இது பிரிட்டிஷாரின் மீதான அடுத்தடுத்த தாக்குதல்களுக்கு வழி வகுத்தது.



ஆசையே துன்பத்துக்கு காரணம்னு இப்பத்தான் நல்ல தெரிஞ்சிக்கிட்டேன்.

எப்படி...

என் மனைவியை நான் ஆசைப் பட்டுத் தானே கட்டிக்கிட்டேன்.

# பெண்கள் மீதான சமூகப்பார்வை

பெண்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகளையும் கொலை வெறித் தாக்குதல்களையும்விட அச்சுறுத்துவதாக இருக்கின்றன அவர்களின் மரணத்துக்குப் பின்னால் விவாதிக்கப்படும் விஷயங்கள். பலர் பார்க்கவோ அல்லது யாருக்கும் தெரியாமலோ ஒரு பெண் கொலை செய்யப்படுகிறாள் என்றால் அந்தக் கொலைக்கான காரணம் காதல், குடும்ப உறவுகளில் சிக்கல், திருமணம் தாண்டிய உறவு இவற்றில் ஏதாவது ஒன்றாகத்தான் இருக்கும். உண்மையில் இவற்றில் எந்தக் காரணமும் இல்லையென்றாலும் ஏதோ ஒன்று அதில் மறைக்கப்படுவதாகத்தான் பலரும் நினைக்கிறார்கள்.

ஆணின் கொலையை, தொழில் பகை, பணத் தகராறு, தனிப்பட்ட விரோதம் என்ற காரணங்களோடு பொருத்திப் பார்க்கும் சமுதாயம். ஒரு பெண்ணின் கொலையையும் ஒரு குற்ற நிகழ்வாக, சமூக அமைதிக்கு ஏற்பட்ட பங்கமாக, மலிந்திருக்கும் சமூகக் கொடுமைகளின் வெளிப்பாடாக ஏன் பார்க்க மறுக்கிறது? பெண்களின் கொலைகளை மட்டும் ஏன் எப்போதும் உறவு சார்ந்த சிக்கலின் ஒரு அங்கமாக மட்டுமே பார்க்கத் தோன்றுகிறது? ஏன் அந்தப் பெண்ணின் ஒழுக்கம் விவாதப் பொருளாகிறது?

காலங்காலமாக நம் சமுதாயத்தில் ஊறிக் கிடக்கும் பெண்ணடிமைத்தனம் நம் மக்களை வேறெப்படியும் சிந்திக்க விடுவதில்லை. கொலைக்கான காரணமாக அந்தப் பெண்ணின் 'ஒழுக்கம்' சுட்டிக் காட்டப்படுகிறது.

ஒரு பெண் கொலைசெய்யப்பட்டது குறித்தோ, குற்றச் செயலில் ஈடுபட்டவர் தண்டனை பெறுவது குறித்தோ பலருக்கும் ஆர்வம் இருப்பதில்லை. கொலைக்கான பின்னணியில் பொதிந்திருக்கும் சுவாரசியங்களில் ஆழ்ந்து போகவே பலரும் விரும்புகிறார்கள். அது தகாத ஒரு உறவாலோ அல்லது உறவு சார்ந்த சிக்கலாலோ விளைந்தது என்றால், அவர்களது கற்பனைத் திறன் திசைகளைக் கடந்து விரியும். கொலை செய்யப்படும் பெண்களிலும் வர்க்க வேறுபாடு பார்ப்பது இன்னொரு நோய்க் கூறு. குரல் கொடுப்பவர்களில் பலரும் கொல்லப்பட்டவரின் சாதி, மதம், இனம் ஆகியவற்றைப் பார்த்துக் குரல் கொடுக்கிறார்கள்.

சுவாதி கொலை வழக்கில் நீதி கேட்டு குரல் உயர்த்தியவர்களில் பலரும் சென்னை ராயப்பேட்டையில் கொலை செய்யப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பெண்களைப் பற்றிக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. அவர்களில் மூன்று பேர் இளம் பெண்கள். குற்றவாளி கைது செய்யப்பட்டுவிட்டார் என்பதால் யாரும் எதுவும் பேசவில்லை என்பதெல்லாம் சப்பைக்கட்டு. முதலில் நான்கு பேரும் பொது இடத்தில் வைத்துக் கொலைசெய்யப்படவில்லை. தவிர கொலைக்குக் காரணமாகச் சொல்லப் படுவது அந்த வீட்டுப் பெண்ணின் தகாத உறவு. இதில் இதற்கு மேல் விவாதிக்க என்ன இருக்கிறது என்ற மனப்போக்கு நியாயமானதா? அதேபோல் வழிப்பறி சம்பவத்தின் போது கொலை செய்யப்பட்ட நந்தினிக்கு நீதி கேட்கும் குரல்கள் வலுத்து எழுந்தனவா?

சுவாதி கொலையில் குற்றவாளிக்கு அதிகபட்ச தண்டனை கிடைக்க வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்கப்போவதில்லை. ஆனால், குற்றம்சாட்டப்பட்டவர்கள் அனைவரையும் நாம் ஒரே தராசில்தான் வைக்கிறோமா? சமூகத்தின் அடித்தட்டில் இருக்கிறவர் என்றால் அவரது பரம்பரைவரை தோண்டித் துருவி, காட்சிப் பொருளாக்குவது எதன் வெளிப்பாடு? சுவாதி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருப்பவர் ராம்குமார். 'என் அண்ணன் இந்தக் கொலையைச் செய்திருக்க மாட்டார்' என்று சொன்னதாலேயே, அவருடைய தங்கையை மிகக் கீழ்த்தரமாக விமர்சிக்க வேண்டிய அவசியம் என்ன? பெண்களும் தரம்தாழ்ந்த வார்த்தைகளால் அந்தப் பெண்ணைச் சாடுவது நாம் நாகரிக சமூகத்தில்தான் வாழ்கிறோமா என்ற கேள்வியை எழுப்புகிறது.

குற்றம் சாட்டப்பட்டவர் ஆண் என்பதால் அவரைக் கொலை செய்ய வேண்டும் என்று கொதித்ததுடன் மட்டும் நிறுத்திக்கொண்ட பலரும் அவருடைய தங்கையை அவரது தோற்றத்தை வைத்தும் நடத்தையைக் கேள்விக்குள்ளாக்கியும் வலைதளங்களில் பதிவிட்டிருப்பது கண்டிக்கத்தக்கது. அச்சிலேற்றவே முடியாத அருவருப்பான வார்த்தைகளால் அந்தப் பெண்ணைக் கூறுபோட்டவர்களை நோக்கி எந்த நடவடிக்கையும் பாயாதா? ஒரு பெண்ணின் கொலைக்கு இன்னொரு பெண்ணின் நடத்தையைக் கொலை செய்வதுதான் தீர்வா?

தவறு செய்கிறவர்களைத் தட்டிக் கேட்கவும் தண்டிக்கவும் காவல் துறையும் நீதிமன்றமும் இருக்க, நாட்டில் நிறைந்திருக்கிற கலாச்சார காவலர்கள் ஏன் எப்போதும் ஒரு பெண்ணின் உடலை, நடத்தையை, உறவு முறைகளைக் கண்காணித்தபடியும் விமர்சித்தபடியும் இருக்கிறார்கள்?

கொலையிலோ, குற்றச் செயலிலோ ஓர் ஆண் சம்பந்தப்பட்டிருந்தால் அவர் செய்த குற்றத்தை மட்டுமே பார்க்கிற ஒவ்வொருவரும், அதே சம்பவங்களில் ஒரு பெண்ணுக்குத் தொடர்பிருந்தால் அந்தப் பெண்ணைக் குற்றவாளியாக மட்டுமே



பார்ப்பதில்லை. அவளது வயது, தோற்றம், நிறம், குடும்பப் பின்னணி, நடத்தை என்று அனைத்துமே கேள்விக்குள்ளாக்கப் படுகின்றன. அவளுடைய எதிர்காலம் சிதைத் தொழிக்கப்படும். சாலையில் நடந்து சென்றவரை கார் ஏற்றிக் கொன்ற சென்னைப் பெண்ணை சமூக வலைதளப் போராளிகள் பலரும் தகாத வார்த்தை களால் வசைபாடியது சமீபத்திய உதாரணம்.

சமூகம் மீதான நம்பிக்கையைச் சிதைக்கும் இப்படியான பக்குவமற்ற செயல்பாடுகள் சில உண்மைகளை உணர்த்துகின்றன பெண்ணின் கொலையை விடவும் அவளது ‘ஒழுக்கம்’ அதிகமாக விவாதிக்கப்படுகிறது. குற்றச் சம்பவங்களில் தொடர்புடைய ஆணைவிட அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் மோசமாக விமர்சிக்கப்படு கிறார்கள். குற்றவாளி பெண் என்றால் இன்னும் வசதி. யார் வேண்டுமானாலும் என்ன வேண்டு மானாலும் சொல்லலாம். அவற்றைப் படித்துத் தங்கள் மன வக்கிரங்களுக்கு வடிகால் அமைத்துக் கொள்ளும் யாரும் எதுவும் கேட்க மாட்டார்கள்.

**ஸ்வாதி, விஷ்ணுப்பிரியா, விழுப் பிரியா, நந்தினி என ஒரு சில பெண்கள் மட்டுமே இப்படி பாதிக்கப்படுகிறார்கள் என்பதல்ல. சமூதாயத்தில் பல பெண்கள் வெளியே சொல்லமுடியாத அளவுக்கு வேதனைகளை அழுபவித்து வருகிறார் கள். சரி இதிலிருந்து மீண்டு வர பெண்கள் செய்ய வேண்டியது என்ன**?

படிக்கும் மாணவிகள் படிப்பில் மட்டுமே கவனம் செலுத்தவேண்டும் அவர்களது உடை மற்றும் அழகு சாதனப்பொருட்கள் மற்றவரை கவர்ந்து இழுக்கும்படி இருக்க கூடாது. பெற்றோர் தம்மை எந்த நோக்கத்திற்காக படிக்க வைக்கிறார்களோ, அந்த நோக்கத்தை நிறைவேற்ற மட்டுமே தங்களின் கவனத்தை செலுத்தவேண்டும்.

பணிக்கு செல்லும் பெண்கள் தங்களுக்கு ஏற்படுகின்ற பணிச்சுமை காரணமாக ஏற்படுகின்ற மன உளைச்சலை யோகா மூலம் போக்கி கொள்ள வேண்டும்.

குடும்பத்தில் உள்ள பெண்கள் தொலைக்காட்சி தொடர்களைப்போல தங்கள் வாழ்க்கை இருக்கவேண்டும் என்ற எண்ணத்தை மாற்றிக் கொள்ளவேண்டும்.

தங்கள் கணவரையும், பிள்ளை களையும் மகிழ்ச்சியுடன் வைத்திருக்க வேண்டும். ஆண்களும் தங்களுடைய தாய், சகோதரி, மனைவி, மகள் என அனைத்து நிலையிலும் பெண்கள் மீதான மதிப்பையும் அன்பையும் சரிவர செலுத்த வேண்டும்.

**ஏனெனில் இறைவன் படைப்பில் ஒன்றை கொடுத்து ஒன்றை எடுப்பது அதிசயமான ஒன்றாகும்**

*வாடமல்லிக்கு வண்ணமுண்டு வாசமில்லை*
*வாசமுள்ள மல்லிகைக்கோ ஆயுள் குறைவு*
*வீரமுள்ள கீரிக்கு கொம்பில்லை*
*கொம்புள்ள மானுக்கோ வீரமில்லை.*
*கருங்குயிலுக்கு தேவையில்லை*
*தோகையுள்ள மயிலுக்கோ இனிய குரலில்லை*
*காற்றுக்கு உருவமில்லை*
*கதிரவனுக்கு நிழலில்லை*
*நீருக்கு நிறமில்லை*
*எவர் வாழ்விலும் நிறையில்லை*
*எவர் வாழ்விலும் குறைவில்லை*
*இறைவன் நினைப்பதுண்டு*
*பாவம் மனிதனென்று*
*மனிதன் நினைப்பதுண்டு*
*வாழ்வு நிலைக்குமென்று...*

**திண்டுக்கல் முபாரக்**




தொழிலதிபர்களின் கவனத்திற்கு....

**விளம்பரம் செய்து விற்பனையை பெருக்கலாம்....**










வியாபாரம் பெருக...விளம்பரம் செய்யலாமே! மித்ரா டைம்ஸ் மாத இதழ் பல்லாயிரக்கணக்கான வாசகர்களை தன்னகத்தே கொண்டு சிறப்பாக வெளி வருகிறது. அந்த வாசகர் களிடையே உங்களது தொழில் தொடர்பான விளம்பரங்களை அளித்தால் வியாபாரம் பெருக வாய்ப்பு உள்ளது.
இன்றே உங்களது நிறுவனத்தை பற்றி விவரங்களை எங்களுக்கு எழுதி அனுப்பி அத்துடன் கீழே குறிப்பிட்டுள்ள தொகைக்கு டிராப்ட் எடுத்து அனுப்பி வைக்கவும்.

## விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின் அட்டை கலர் | - | ரூ. 15,000 |
| உள் அட்டை கலர் | - | ரூ. 10,000 |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | - | ரூ. 7,000 |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | - | ரூ. 3,500 |
| கால் பக்கம் கருப்பு வெள்ளை | - | ரூ. 2,000 |

படித்துவிட்டு வேலையில்லையா? மித்ரா டைம்ஸ் வாங்க!

படித்துவிட்டு வேலையில்லையே என்ற கவலை வேண்டாம். நமது மித்ரா டைம்ஸ் மாத இதழுக்கு 30% கமிஷன் அடிப்படையில் விளம்பரம் சேகரித்து மாதம் ரூ.25,000 சம்பாதிக்கலாம்.

**CONTACT**

501, Suruthi Block, Chitra Avenue, Choolaimedu High Road, Chennai - 94
Ph : 044-23743007 / 08, Mob. 8190828662 e-mail : mitragroups2015@gmail.com www.mitrahomemakers.com



வியப்பு நகரம்

# வாடிகன் அரண்மனையின் அதிசயங்கள்

## அறியாத இரகசியங்கள்

**வா**டிகன் நகரம் என்று அழைக்கப்படுகிற 100 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடம், ஒரு தேசம் என்றால் ஆச்சரிய மாகத்தான் இருக்கிறது. உலகிலேயே மிகச் சிறிய நாடு இதுதான். வாடிகன் சிறிய நகராக இருந்தாலும் இதற்கு சொந்தமான சொத்துக்கள் பல லட்சம் மடங்கு இருக்கிறது. இவை எல்லாவற்றையும் வாடிகன் தனது சொந்த கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

வாடிகன் அரண்மனையில் 1,600 அறைகள் உள்ளன. இந்த அறைகளில் என்ன நடக்கிறது என்பது கடந்த ஆயிரம் வருடங்களாக யாருக்கும் சரியாகத் தெரியாது. இந்த பிரம்மாண்டமான அரண்மனைக்குள் செல்ல மூன்று கதவுகள் மட்டுமே உள்ளன. அந்த கதவுகளும் எப்போதும் மூடியே இருக்கும். முக்கியமான சில நாட்களில் மட்டுமே கதவுகள் திறக்கப்படும். இந்த அரண்மனையில் என்ன நடக்கிறது என்பது ரோம் நகர மக்களுக்குக் கூட தெரியாது, அதனால் இந்தக் கதவுகள் திறக்கப் பட்டால் எட்டிப்பார்ப் பதை ரோமானியர்கள் இன்றைக்கும் வழக்கமாக வைத்திருக்கிறார்கள்.

வாடிகன் அரண்மனையை சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த 3,000 காவலர்கள் பாதுகாத்து வருகிறார்கள். இவர்கள் ஆறு அடிக்கு குறையாத உயரத்துடனும், ஏற்கனவே ராணுவத்தில் ஒரு வருடம் பணிபுரிந்த அனுபவமும் பெற்றவர்கள். இந்த அரண்மனையில் அமர்ந்து கொண்டுதான் உலகம் முழுவதும் உள்ள 3லட்சம் தேவாலயங்களை போப் ஆட்சி செய்து வருகிறார். இந்த தேவாலயங்களின் கணக்கு வழக்குகளைப் பார்க்க மட்டும் 3,000 பணியாளர்கள் அரண்மனையில் வேலை செய்கிறார்கள்.



எஸ்.சுருதிலஷ்மி
XI-Std
VIDYAA VIKAS MATRICULATION HIGHER SECONDARY SCHOOL KARAMADAI,

இந்த அரண்மனையில் வேலை பார்க்கும் அலுவலர்கள், அதிகாரிகள் உண்மையில் கொடுத்து வைத்தவர்கள். இங்கு வேலை செய்து மிகவும் கவுரவமானது, பத்திரமானது. நிறைய சம்பளத்தை தரக்கூடியது. இவர்களுக்கு வருமான வரி கிடையாது. அதனால் இங்கு வேலை செய்யும் அதிகாரிகள் உலகிலேயே சிறந்த அரசு நிர்வாகிகளாக கருதப்படு கிறார்கள்.

வாடிகன் அரண்மனைக்குள்தான் உலகிலேயே மிகப்பெரிய அச்சு இயந்திரங்கள் இருக்கின்றன. இங்குதான் உலகிலுள்ள அத்தனை மொழிகளிலும் பைபிள், அதன் சம்பந்தமான பிரசார புத்தகங்களை அச்சிட்டு அனுப்பிக் கொண்டே இருக்கிறார்கள். இவர்களுக் கென்று தனியாக பதிப்பகம், தொலைக் காட்சி, வானொலி, இணைய தளம் என எல்லாம் இருக்கிறது.

உலகத்திலேயே மிகப்பெரிய நூலகமும் வாடிகன் அரண்மனையில்தான் உள்ளது. இந்த நூலகம் மிகப்பெரிய நூலகமாக இருந்தபோதும் கி.பி. 2000ம் ஆண்டு வரை இதனுள் நுழைய யாருக்கும் அனுமதியில்லை. போப் இரண்டாம் ஜான் பால் தான் அந்த விதியை தளர்த்தி படைப்பாளிகளும், விஞ்ஞானிகளும் குறிப்பு எடுப்பதற்கு பயன்படுத்தி கொள்ளலாம் என்று அனுமதி வழங்கினார். அன்றிலிருந்து ஏராளமான பேர் நூலகத்தினுள் சென்று குறிப்பெடுத்து வருகிறார்கள்.

இந்த நூலகம் ஏன் இத்தனை முக்கியத்துவம் பெறுகிறது என்றால் இரண்டாயிரம் ஆண்டுகளாக உலகில் உள்ள மற்ற மதங்களின் அபூர்வ சிந்தனைக் குறிப்புகள் ஆராய்ச்சி முடிவுகள் என்று பலவும் அந்தந்த நாட்டு மக்களும், அந்தந்த மத இன மக்களும் தெரிந்து கொள்ள முடியாதபடி இங்கு மறைத்து வைத்திருக் கிறார்கள்.

இப்போது கட்டுப்பாடு தளர்த்தப் பட்டு இருப்பதால், மக்களிடம் மறைக்கப் பட்ட பல உண்மைகள் வெளி வரும்.

# கேள்விகள் இங்கே! விடைகள்?

திருப்பதி கோவிலை கட்டியவர் யார்?

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | | ணா | | | தொ | | | | ன் |

கஜினி முகமது இந்தியாவின்மீது எத்தனைமுறை படையெடுத்தார்?

| | | | |
|---|---|---|---|
| ப | | னே | |

ஆயுத எழுத்தின் மற்றொரு பெயர் என்ன?

| | | | |
|---|---|---|---|
| | கே | | ம் |

தஞ்சை பெரிய கோவிலைக் கட்டியவர் யார்?

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இ | | ண் | | ம் | ரா | | ரா | | சோ | | |

தமிழிலக்கணம் எத்தனை வகைப்படும்?

| | | | |
|---|---|---|---|
| | | | து |



S.SURYA
VII-B
SHERWOOD HALL SENIOR SECONDARY SCHOOL.
CHENNAI

**சரியான விடைகளை 20.09.2016-க்குள் அனுப்பி வைக்க வேண்டும். குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் முதல் மூன்று சிறுவர்களுக்கு பரிசுகள் காத்திருக்கிறது.**

அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர்
**மித்ராடைம்ஸ்**
#501, சுருதிபிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு, சென்னை-600 094
போன் : 044-23744661,23743007/8





# உப்பு மந்திரம்!

அதிகாலை எழுந்தவுடனே ரெண்டு கையிலயும் கல்லு உப்பை வச்சு மூடிக்கிட்டு கிழக்கு பக்கமாப்பாத்து உட்கார்ந்துக் கணும்!

மடியில ஒரு ஒயிட் பேப்பர் வச்சுக்கணும்!

மாமியாரால பிரச்னைன்னு வச்சுக்கோங்க... கண்ண மூடிக்கிட்டு எனக்கும் என் மாமியாருக்கும் எந்த பிரச்னையும் இல்லை. நாங்க சந்தோஷமா இருக்கோம். என் மாமியார் ரொம்ப நல்லவங்க. நான் அவங்களைப் புரிஞ்சுக் கிட்டேன். என் மேல அவங்களுக்கு ரொம்ப பாசம்னு திரும்பத் திரும்பச் சொல்லணும்!!

அதேபோல, பணப்பிரச்னைன்னு வச்சுக்கோங்க...; கண்ணை மூடிக்கிட்டு, எனக்கு நிறைய பணம் கிடைக்கும்!!; என்னோட கஷ்டம் எல்லாம் தீர்ந்திடும்னு சொல்லணும்!!

உடம்புல ஏதாவது பிரச்னைன்னா, எனக்கு எந்த நோயும் இல்லை..!!; உடம்புல இருக்கிற பிரச்னை எல்லாம் தீர்ந்துடுச்சு...!! நான் ஆரோக்கியமா இருக்கேன்னு சொல்லணும்!!;

மனசுக்குள்ளயும் சொல்லலாம்!! வாய்விட்டு சத்தமாவும் சொல்லலாம். 10 நிமிஷம் சொன்னாப் போதும்.

முடிச்சதும் கையில வச்சிருந்த உப்பை மடியில வச்சிருக்கிற ஒயிட் பேப்பர்ல கொட்டி, சிந்தாம மடிச்சு ஓடுற தண்ணியில கலந்து விட்டுடணும்!!

நீங்களும் செஞ்சு பாருங்க!!; பத்து நாளுக்குள்ள பலன் தெரியும்!!

இது என்ன வேடிக்கை?! கையில் இருக்கிற உப்பு எப்படி வேலை செய்யும்??

இந்த உப்பு மந்திரத்தைக் கற்றுத் தந்த டாக்டர் ஜிதேந்திராவிடம் கேட்டோம்!

"இது ஒண்ணும் புதிசில்லை. காலங்காலமா நம்ம மக்கள் மத்தியில புழக்கத்தில இருக்கிற ஒரு விஷயம்தான்!!

மந்திரிக்கும் போதும், திருஷ்டி சுத்தும்போதும் நம்ம மக்கள் கையில உப்பு வச்சு சுத்துவாங்க. சில கோயில்கள்ல உப்பு வாங்கிக் கொட்டுவாங்க!

'பாவத்தைப் போக்குறோம்'னு சொல்லி கடல்ல குளிக்கிறது, கடல் தண்ணியை தலையில அள்ளித் தெளிக்கிறது, கடலோரத்துல ஈமக்கிரியைகள் செய்றது, கடல்ல கால் நனைக்கறதுன்னு சொல்றதுக்கெல்லாம் காரணம் என்ன?

இதையெல்லாம் சர்வசாதாரணமா மூட நம்பிக்கைன்னு அறிவாளிகள் புறம் தள்ளிடுவாங்க!!

உண்மையிலேயே அதுக்குள்ள அறிவியல் இருக்கு. அந்த அறிவியலை "Ora Science" என்று சொல்வாங்க!!

எதிர்மறை சக்தி (Negative Energy) & நேர்மறை சக்தி (Positive Energy) இது ரெண்டும்தான் மனிதனோட குணநலன்களையும் வாழ்க்கையையும் தீர்மானிக்குது!!!

உப்பு, நெகடிவ் எனர்ஜியை வெளியேத்துர *சக்தி கொண்ட ஒரு பொருள்!!!*

கைக்குள்ள உப்பை வச்சுக்கிட்டு பாசிட்டிவ்வா நினைத்தாலோ; அல்லது பேசினாலோ உடம்புக்குள்ள இருக்கிற நெகட்டிவ் எனர்ஜி வெளியேறிடும்!!!

*இது மாயமோ, மந்திரமோ இல்லை!! முற்றிலும் அறிவியல்!!*

உடம்புல நெகட்டிவ் எனர்ஜி வெளியாகி பாசிட்டிவ் எனர்ஜி அதிகரிக்கும்போது; அதுவே "அதிர்வுகளாக" (Vibration) வெளியில வந்து எதிராளிக்கிட்ட போகும்!!! எதிராளி யோட அணுகுமுறையும் பாசிட்டிவ்வா மாறும்!!!

ஒரு விஷயத்தை திரும்பத்திரும்ப சொல்லும்போது நாம் அதுவாவே மாறிடுவோம்!! இதுவும் *அறிவியல் தான்!!*

எப்பவும் திட்டிக்கிட்டே இருக்கிற மாமியார், மருமகளை மரியாதையா நடத்துறதும்; எப்பவோ விட்டுட்டுப் போன அம்மா மகளைத் தேடி வந்ததும்; விபத்துல இருந்தவங்க குணமாகுறதும் இப்படியான நிகழ்வுகள் பாசிட்டிவ் எனர்ஜியோட விளைவுதான்!!!

இன்னைக்கும் கிராமங்கள்ல உப்பை மட்டும் ஓசி வாங்கக்கூடாதுன்னு சொல்வாங்க!! அப்படியே வாங்கினாலும் கையால வாங்க மாட்டாங்க!! அப்படி வாங்கினால், கொடுக்கிறவங்களோட நெகட்டிவ் எனர்ஜி வாங்குறவங்களுக்கு வந்திடும்!!! இந்த உண்மை கிராமத்து மக்களுக்குத் தெரிஞ்சிருக்கு..!!,

நாமும் சில உண்மைகளை ஏற்றுக் கொண்டால்தானே அதிலுள்ள நன்மைகளை நாம் உணர முடியும்!*

-சுஜாதா மூர்த்தி

## ஓவியம் வரைந்தவர்



**எஸ்.ஜானகி**

**IX-A Std**

**GOOD SHEPHERD**

**MATRICULATION HIGHER SECONDARY SCHOOL**





தொடர் - 3

# விளம்பரம் பார்த்து மனை வாங்க போறீங்களா?

லே-அவுட் ஆரம்பத்தில் அரண்மனை தோற்றத்தில் நுழைவுவாயில் இருக்கும். உள்ளே பிளாட்களை பிரித்துக் காட்டும் கற்கள் ஒழுங்காக நட்டு வைத்திருப்பார்கள். ரோடு கூட அருமையாகப் போட்டிருப்பார்கள். சில இடங்களில் குழந்தை விளையாடுவதற்கான பூங்கா கூட அமைத்திருப்பார்கள். லேஅவுட்டின் ஆரம்பத்தில் ஹாலோ பிளாக் மூலம் ஒரே ஒரு கட்டிடத்தைக் கட்டும் வேலை நடந்து கொண்டிருக்கும்.

இதை எல்லாம் பார்த்து, நீங்கள் வாயைப் பிளந்தால், ஏமாறப்போகிறீர்கள் என்று அர்த்தம்!

காரணம் இவையெல்லாம் பிளாட்டுகள் விற்றுத் தீர்ந்து முடிகிறவரைதான் இருக்கும்!எல்லா பிளாட்டுகளும் விற்றுவிட்டால், ஹாலோ பிளாக் வீட்டை அப்படியே பிடுங்கிக் கொண்டுபோய், புதிதாக பிளாட் போட்டிருக்கும் வேறு லேஅவுட்டில் கொண்டு போய் வைத்து விடுவார்கள். ஜாக்கிரதை!

**பஞ்சாயத்து அப்ரூவலா உஷார் !**

காய்கறியை கூறுபோட்டு விற்கிற மாதிரி இடத்தை துண்டாக்கி விற்பதுதான் பஞ்சாயத்து மனை அப்ரூவல் என்றாகிவிட்டது. இதற்குமுன் பஞ்சாயத்து பகுதியில் லேஅவுட் போட வேண்டும் என்றால் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர், இந்த இடத்தைப் பிரித்து லேஅவுட் போட ஆட்சேபனை இல்லை என எழுதித் தர வேண்டும். இப்போது அந்த விதிமுறை இல்லை என்பதால் பெரும்பாலான பஞ்சாயத்து லேஅவுட்களில் பஞ்சாயத்து தலைவரின் அனுமதி இல்லாமலே லே அவுட் போடப்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்து கூட்டத்தில் தீர்மானம் போட்டு லேஅவுட் போட அனுமதி கொடுக்கவில்லை அல்லது சம்பந்தப்பட்ட லேஅவுட்டில் சாலைகள் பஞ்சாயத்திடம் ஒப்படைக்க வில்லை எனில் பிற்காலத்தில் வீடு கட்டும்போது சிக்கல்தான்!

**சாப்பாட்டுக்கு காசு கொடு**

இடம் பார்க்க அழைத்துச் செல்ல வாகன வசதியை ஏற்பாடு செய்கின்றன சில நிறுவனங்கள். இப்படி அழைத்துச் செல்லப்படுகிறவர்கள். இடத்தைப் பார்த்துவிட்டு, எதுவும் வாங்கவில்லை எனில், ஆளுக்கு 50 ரூபாய் அல்லது 100 ரூபாய் தர வேண்டும் என்கின்றன. இன்னும் சில நிறுவனங்கள், வண்டிச்செலவு, மதிய சாப்பாடு, சாயந்திரம் டிபன், டீ செலவுக்கு 300 ரூபாய் முதல் 500 ரூபாய் தர வேண்டும் என்று கேட்கிறார்களாம். அண்மையில் தாம்பரத்திலிருந்து திண்டிவனத்திற்குச் சென்ற நண்பர் ஒருவர் இப்படி 500 ரூபாய் அழுது விட்டு வந்தாராம்.

**போலீஸில் புகார் செய்தால்...?**


தகிடுதத்தம் செய்யும் ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் மீது புகார் தர காவல் நிலையத்திற்குச் சென்றால், அதை



வாங்க மறுக்கிறார்களாம் போலீஸ்காரர்கள். “அது நல்ல நிறுவனமாச்சே! 25 வருஷமா ஒரு புகார் வந்ததில்லையே!” என்று நம்மிடம் சொல்லிவிட்டு, சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் அதிபருடன் பேசி, பிரச்சனையை சுமூகமாக முடிக்கிற மாதிரி முடித்து, காசு பார்த்து விடுகிறார்களாம் ! ரியல் எஸ்டேட் நிறுவனங்களுக்கும் லோக்கல் போலீஸுக்கும் பிசினஸ் உறவு இருப்பதே இதற்கு காரணம் என்கிறார்கள். ஆக, இடம் வாங்கும் விஷயத்தில் உஷாராக இருந்தால் நஷ்டப்படாமல் தப்பிக்கலாம் என்பது மட்டும் உண்மை!

**கிராமங்களில் மனைகள் வாங்கலாமா?**

பெரு நகரங்களில் வீட்டுமனைகளின் விலை கோடியைத் தாண்டி விட்டது. சிறுநகரங்களிலோ லட்சங்களில் விற்பனையாகிறது. எனவே விலை குறைவான மனைகள் கிடைக்கின்றனவா? என்ற



**"சங்கடங்களை போக்க சம்மணமிடுங்கள்..."**



மக்களின் எதிர் பார்ப்பும் எகிறிக் கொண்டேதான் இருக்கிறது. அந்த எதிர்ப்பார்ப்பைக் கிராமப் பஞ்சாயத்து எல்லைக்குள் விற்பனை செய்யப்படும் வீட்டு மனைகளே பூர்த்தி செய்கின்றன. நடுத்தர மக்கள் கிராம பஞ்சாயத்துக்குட்பட்ட எல்லையில் வீட்மனைகளை வாங்கி விடுகிறார்கள். இன்னும் சிலரோ முதலீட்டு கோணத்தில் கிராமப் புறங்களில் மனைகளை வாங்குவதும் உண்டு. எல்லாம் சரிதான். இப்படி வாங்கப்படும் மனைகள் அரசின் அனுமதி பெற்றதா? என்பதைக் கவனிக்காமல் விட்டால் சிக்கல்தான்.

தமிழகத்தைப் பொறுத்தவரை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் (சி.எம்.டி.ஏ), நகர ஊரமைப்பு இயக்குனரகம் (டி.டி.சி.பி.) ஆகிய இரண்டு அமைப்புகள்தான் வீட்டு அனுமதி வழங்கும் அதிகாரங்களைப் பெற்றிருக்கின்றன.

பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு இப்படி ஒரு அதிகாரம் கிடையவே கிடையாது. குறைந்த விலையில் மனைகளை வாங்கும் பலரும் இந்த விஷயத்தை சரிவர கவனிப்பதில்லை.

பஞ்சாயத்து அப்ரூவல் என்று சொல்லி மனைகளை விற்பவர்களும் உண்டு. பின்னர் அங்கீகாரம் வாங்கிக் கொள்ளலாம் என்றும் கூட சொல்லுவார்கள்.

தொடரும்

## எந்தெந்த விரல்களால் விபூதியை தொடலாம்? தொடக்கூடாது?

கோவிலுக்கு சென்று இறைவனை வழிபடும்போது, அங்கே அர்ச்சகர் நமக்கு விபூதியும் குங்குமமும் அளிப்பார். அப்படி அளிக்கப்படும் விபூதியை வாங்கி நெற்றியில் இடும்போது, நாம் அதை எப்படி, எந்தெந்த விரல்களால் எடுத்து நெற்றியில் இடுகிறோம் என்பதை நம்மில் பலருக்கு தெரிவதில்லை.

விபூதியை எடுக்க சில விரல்களை பயன்படுத்தும் போதும் தீமையும், சில விரல்களை பயன்படுத்தும்போது அதீத நன்மைகளும் ஏற்படும். ஆகவே விபூதியை எடுக்கும்போது, கீழே குறிப்பிட்டுள்ள வரிகளில் உள்ள முறைகளை பயன்படுத்தி, மிகவும் கவனமாக எடுத்து அணியவேண்டும்.

**கட்டை விரல் :** கட்டை விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் தீராத வியாதி வரும்.

**ஆள் காட்டி விரல் :** ஆள் காட்டி விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் பொருட்கள் நாசம்.

**நடுவிரல் :** நடுவிரலால் விபூதியை தொட்டு இட்டுக்கொண்டால் நிம்மதி யின்மை.

**மோதிர விரல் :** மோதிர விரலால் விபூதியை தொட்டுக்கொண்டு அணிந்தால் மகிழ்ச்சியான வாழ்க்கை.

**சுண்டு விரல் :** சுண்டு விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் கிரகதோஷம் எற்படும்.


**மோதிர விரலாலும், கட்டை விரலாலும்** சேர்த்து விபூதியை எடுத்து மோதிர விர லால் விபூதியை இட்டுக் கொண்டால் உலகமே வசப்படம். எடுக்கும் முயற்சி வெற்றி பெறும்.





# பக்தியை சுவாசியுங்கள்

ஒவ்வொரு மனிதனும், இந்த பிறவியைத் தொடர்வது, போனஜென்ம வாசனையே, அதன் தொடர்ச்சியாகத்தான், இந்த பிறவி எடுத்துள்ளனர். அதன் அடிப்படையில் தான் நம் வாழ்க்கை நடக்கின்றது. இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், பலருக்கும் இது புரிவதில்லை. நம் வாழ்க்கையில் நடப்பது அனைத்தும் பூர்வ ஜென்ம வாசனையே! அவை சரியாக நடக்கும்பொழுது எந்தவித சிரமமும் இல்லை.



ஸ்ரீ திருமூலர்

இந்த பிறவியில் சத்கர்மாக்களை சேர்வதின் மூலம் பல குழப்பங்கள் நிகழ்கின்றது. ஒவ்வொரு மனிதனுக்கும் சரியான விழிப்புணர்வு இருக்கும் பட்சத்தில், சத்கர்மாக்களை தடுக்கலாம். ஆமாம். இந்த சத்கர்மாக்கள் எப்படி உண்டா கின்றது? என்ற கேள்வி எழலாம். அதாவது நமது கண், வாய், மூக்கு, செவி உடம்பு இவையே காரணம்.

இவை நமது ஐம்பொறிகள் இவைகள் தன்கடமையை சரியாக செய்தாலும் நம் அறிவு நம்முடைய அனுபவத்தின் அடிப்படையில் புரிந்து கொள்கின்றது. அது சரியாகவும் இருக்கலாம், இல்லையென்றால் தவறாகவும் இருக்கலாம். அது நம் புரிதலைப் பொறுத்தது. மேலும் கர்மா, இந்த ஐம்பொறிகளின் துணைக்கொண்டுதான் செயல் புரிகின்றது.

**திருமூலர், இந்த ஐம்பொறிகளை கள்ளபுலன் என்று சொல்கின்றார். அதாவது உள்ளம் பெருங்கோவில் -ஊன், உடம்பு ஆலயமாம் உள்ளன்பினார்க்கு வாய் கோபுர வாசல் தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம் கள்ளப்புலன் அனைத்தும் களாமணி விளக்கே என்று சொல்லுகின்றார்.**

ஆக நாம் நம் வாழ்வில் சத்கர்மாவை சேர்க்காமல் இருக்க வேண்டும். இந்த பிறவியில் நமக்கு விதிக்கப்பட்டது நமக்கு கிடைக்கும். இந்தப் பிறவியில் நமக்கு மறுக்கப் பட்டது, நாம் ஆசைப் பட்டது, நாம் அதிகம் விரும்பியது அதை அடைய முயற்சி செய்யும்போது சேர்வது சத்கர்மா. இந்த உலக நிகழ்வுகளை நாம் பார்க்கலாம். ரசிக்கலாம். அடைய நினைக்கும் பொழுதுதான் பிரச்சனையே வருகின்றது.

நமக்கு விதிக்கப்பட்டது கிடைக்கும் என்பது மாங்கொட்டையை விதைத்தால், மாமரம் முளைத்து வளரும். வேறு மரம் முளைக்காது. அதுபோல்தான், நமக்கு விதிக்கப்படாத விஷயங்கள். தினமும் இறை மந்திரத்தை வாசியுங்கள். பக்தியை சுவாசியுங்கள். அது கற்றுத்தரும் உங்களுக்கு விதிக்கப்பட்டது என்ன என்பதை உணருங்கள். விழிப்புணர்வு கொள்ளுங்கள். மகிழ்ச்சியாக வாழுங்கள்

**- சிவமனோகர்**

# கவலையின்றி வாழ்வோம்

மனிதமான இந்த பூமிப்பந்தின் மீது வந்து பிறக்கும் அனைவருக்குமே நூறு வயது வாழ வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. நியாயமான ஆசைதான். ஆசைப்பட்டால் மட்டும் போதுமா? ஒரு இலக்கை அடையும் முயற்சியில் முழுமனதோடு ஈடுபட வேண்டாமா? ஆனால் இதற்கான முயற்சிகளில் நம்மில் எத்தனை பேர் முழுமனதோடு ஈடுபடுகிறோம் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டிய தருணம் இது.

ஒரு சமயம் பிட்சு ஒருவர் புத்தரைச் சந்தித்தார். தன் மனதில் நீண்ட நாட்களாக இருந்து வந்த ஒரு சந்தேகத்தை புத்தரிடம் கேட்டார்.

“புத்தரே. தாங்கள் ஒவ்வொரு மனிதனும் மோட்சத்தை அடைய முடியும் என்று சொல்லிக் கொண்டிருக் கிறீர்கள். ஆனால் மனிதர்கள் எதனால் மோட்சத்தை அடைவதில்லை?“

“நீ ஒரு காரியம் செய். இந்த பகுதியிலுள்ள மனிதர்களைச் சந்தித்து அவர்கள் எதை அடைய விரும்பு கிறார்கள்? என்று கேட்டு அவர்கள் சொல்வதையெல்லாம் மனதில் பதிவு செய்து கொண்டு வா!“

புத்தபெருமான் இவ்வாறு சொன்னதும் அந்த பிட்சு உடனே அந்த வேலையைத் தொடங்கினார்.

அந்த ஊரில் இருந்த பலதரப்பட்ட மனிதர்களைச் சந்தித்து புத்தர் கேட்கச் சொன்னது போலவே “தாங்கள் எதை அடைய விரும்புகிறீர்கள்?“ என்று கேட்டார். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களின் விருப்பத்தைத் தெரிவித்தார்கள்.

அன்று மாலை பிட்சு புத்தரைச் சந்தித்தார்.

“நான் சொன்னவாறு செய்தாயா?“ என்று கேட்டார் புத்தர்.

“ஆம். தாங்கள் சொன்னபடியே செய்தேன்.“

“கேட்டவற்றைச் சொல்“.

“பிட்சு தான் சந்தித்த மனிதர்கள் அடைய விரும்பிய விஷயங்களை ஒவ்வொன்றாகக் கூறினார்.“

இவற்றை அமைதியாகக் கேட்ட புத்தர் பிட்சுவிடம் கேட்டார்.

“இவர்களில் ஒருவர் கூட மோட்சத்தை அடைய விரும்புகிறேன் என்று சொல்லவில்லையே?“

அந்த பிட்சுவும் அப்போதுதான் இதைப் பற்றி யோசித்தார்.

“ஆம். ஒருவர் கூட மோட்சத்தை அடைய விரும்புகிறேன் என்று என்னிடம் சொல்லவில்லை“

,இப்போது புத்தபெருமான் பிட்சுவிடம் ஒரு கேள்வியினைக் கேட்டார்.

“விரும்பாத ஒன்றை எவ்வாறு அடைய முடியும்?“

பிட்சுவும் புத்தபிரானின் கேள்வியில் இருந்த உண்மையைப் புரிந்து கொண்டு அமைதி காத்து நின்றார்.

நாம் யாரையாவது வாழ்த்தும்போது

“நூறு ஆண்டு காலம் வாழ்க“என்று வாழ்த்துகிறோம். யாராவது நம்மை நினைக்கும்போது நாம் அங்கே சென்றால் “இப்பதான் உங்களைப் பத்தி நினைச்சேன். வந்து நிக்கறீங்க. உங்களுக்கு நூறு வயசு“ என்பார்கள்.

நூறு வயது வாழ்வது என்பது பெரிய விஷயமல்ல இந்த உலகில் நாம் வாழும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் ஆரோக்கியமாக வாழ வேண்டும். நிம்மதியாக வாழ வேண்டும். அதுதான் முக்கியம். படுத்தபடுக்கையாக ஆயிரம் ஆண்டுகள் வாழ்வதில் யாருக்கு என்ன லாபம்? மாறாக பிறருக்கு தொந்தரவுதான். இப்படி பிறருக்குத் தொந்தரவு கொடுத்து நூறு ஆண்டுகள் வாழ்வதால் ஒரு பயனும் இல்லை. முழுமையான ஆரோக்கியமே நமது வாழ்நாள் குறிக்கோளாக இருக்க வேண்டும். எந்த ஒன்றையும் நாம் அடைய வேண்டும் என்று விரும்பினால், அதன்மீது நாம் ஆசைப்பட வேண்டும். எந்த ஒரு விஷயத்தையும் அடைய நாம் முழுமனதோடு முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நம் ஆசை நிறைவேறும். வாருங்கள். ஆரோக்கியமாக வாழ்வது எப்படி என்ற விஷயத்தைப் பற்றி பேசுவோம்.

கவலையைத் துரத்துங்கள்

நூறு வயது நம் அனைவருக்குமே உள்ளது. கவலை வேண்டாம். நிச்சயம் வாழ்வோம். அதற்கு மிக மிக முக்கியமாக நாம் கடைபிடிக்க வேண்டிய ஒரு விஷயம் கவலையற்ற வாழ்க்கை. கவலை என்பது ஒரு கரையானை போல செயல்படும். கரையான் மரத்தை அரித்துத் தின்று தின்று அந்த மரத்தையே அழித்து விடும். கவலை நம்மை சிறிது சிறிதாக அழித்துக் கொன்று விடும். பக்கவாதம், ஹார்ட் அட்டாக் போன்ற நோய்கள் கவலையின் காரணமாகவே எற்படுகிறது. ஆரோக்கியமான உணவுகளை உண்டு ஆரோக்கியமாக வாழுங்கள்.









# நாக தோஷம் தீர்க்கும் ஆசூர் ஏகாம்பரநாதர்

இப்பெரும் பாரத பூமியில் மிக்க வளமுள்ள சோழநாட்டின் தொண்டை மண்டலத்தில் உள்ளது காஞ்சிபுரம் மாநகரம். அங்கு உள்ள பாலாற்றின் வடகரையில் ஸ்ரீ காமாட்சியம்பாள் ஆற்றின் மணலை சிவன்போல் வடித்து பூஜை செய்து வந்தார். அம்மணல் தெறித்து விழுந்த இடம்தான் ஆசூர் கிராமம். இங்கு ஸ்ரீ காமாட்சியம்பாள் சமேத ஏகாம்பரநாதர் குடி வீற்றிருக் கிறார்.

காஞ்சி ஆதிசங்கர பரமாச்சாரியார் இக்கோவிலுக்கு வந்திருந்து ஸ்ரீ ஏகாம்பர நாதருடன் சில நாழிகைகள் ஐக்கியமாகி இருந்திருந்தார் என்பது செவிவழிவாக்கு. பல வருடங்களுக்கு முன்பு காஞ்சி ஸ்ரீலஸ்ரீ பெரியவாள் வந்து தரிசித்துச் சென்று உள்ளார். அவரது திருவடிபட்ட பூமிதான் ஆசூர் கிராமம்.

ஆசூர் ஏகாம்பரநாதரை பூஜை செய்யும் அர்ச்சகர், இவரை பூஜை செய்து, தன் ஜீவனோபாத்தியத்திற்கு காஞ்சி சென்று ஏகாம்பரநாதர் கோவில் தொண்டு செய்து காலம் தள்ளி வந்தார். அவ்வேளையில் மிகுந்த மழை காரணமாக ஆற்றில் வெள்ளம் வந்துவிட்டது. மறுகரை செல்ல முடியாமல் போய்விட்டது. இதுகுறித்து அந்த அர்ச்சகர், ஏகாம்பரரை நினைத்து தன் இக்கட்டான சூழ்நிலையை மனதில் எண்ணி வருந்தினார். மனம் மிகவும் நொந்தார். அவ்வேளையில், பக்தா, நீ கவலைப்படாதே! நீ இங்குள்ள என்னை காஞ்சி ஏகாம்பரநாதராக நினைத்து பூஜிப்பாய். நானும் உனது கவலையை போக்கி, உனக்கு கிடைக்க வேண்டியதற்கு ஏற்பாடு செய்கிறேன். கவலையை விட்டு விடு என்றது.

அது முதல் அந்த அர்ச்சகரும் ஆசூர் சிவனையே பூஜித்து வாழ்ந்து வந்தார். அவரது வம்சத்தில் வந்தவர்தான் பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்த திருஏகாம்பர குருக்களின் புதல்வர்தான் திரு. A.E.கிருஷ்ணசாமி குருக்கள். ஆவார்.

இத்திருக்கோயில் 8.06.2016 அன்று 8 கால யாகசாலைபூஜையுடன் ஜீர்த்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைப்பெற்றது. இக்கோயிலின் அம்மன் சன்னதி வாயிலில் மேற்புறம் நாகபாம்பு வடிவமும், சந்திரப்பிறையும், சிவன் சன்னதி வாயில் மேற்புறம் மச்சவடிவமும் பொறிக்கப் பட்டது. அதாவது **நாக, சர்ப்ப தோஷம் உள்ளவர்கள் இந்த சிவனைப் பூஜித்தால் நாகதோஷம் தீரும் என்கிற நம்பிக்கை உள்ளது.** அதுபோலவே அங்கு நாகதோஷ பூஜையும், திருமண தடை கஷ்டங்களையும் போக்கும் கால பைரவர் பூஜையும் நடந்து வருகிறது. மேலும் தொன்மை மிகுந்த இக்கோயில் நிர்வாகத்தை திரு. ஆசூர் கண்ணன் சிவாச்சாரியார் செய்து வருகிறார்.



இத்திருக்கோயில் காஞ்சிபுரம் வாலாஜாபாத்திலிருந்து 8 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. வாலாஜாபாத்தி லிருந்து அவளூர் வழியாக ஆசூரை அடையலாம். மேலும் சென்னையிலிருந்து வாலாஜாபாத் வந்து வரலாம். காஞ்சிபுரத்திலிருந்தும், செங்கல் பட்டிலிருந்தும் வாலாஜாபாத் வந்து வரலாம்.

இத்திருக்கோவில் தினமும் காலை 7.00 மணி முதல் 10 மணி வரையும், மாலை 5 மணி முதல் 7 மணி வரையும் திறந்து இருக்கும்.

பக்தகோடிகள் பிரதோஷ பூஜையிலும், நாகசர்ப்பதோஷ நிவர்த்திப் பூஜையிலும், சாந்தி ஹோமம், கால பைரவ ஹோமம் செய்து தாங்கள் தங்கள் கஷ்டங்களைப் போக்கி நிவாரணம் அடையலாம்.

காஞ்சிபுரத்திலிருந்து வாலாஜா பாத்தி லிருந்து கொளத்தூர் பேருந்திலும் அடையலாம்.

**இந்து அறநிலையத் துறையின் கட்டுப் பாட்டில் உள்ள திருக்கோயிலில் நிர்வகிப்பவர் பரம்பரை அறங்காவலர் திரு.ஆசூர் ரி.கன்னன் ஆச்சாரியார் அவர்களின் தொலை தொடர்பு எண். 044-23722411, செல் : 9884082239**



# குருப்பெயர்ச்சி

நிகழும் துர்முகி வருடம் ஆடிமாதம் 18ந் தேதி செவ்வாய்க்கிழமை 2.08.2016 காலை 9.24க்கு கன்னியா லக்னம் சிம்ம ராசியிலிருந்து இருந்து கன்னியா ராசிக்கு குருபகவான் இடம் பெயர்கிறார். இந்த ஆண்டு ராகு, கேது சனிப்பெயர்ச்சி கிடையாது.

**பரிகாரம் செய்துக்கொள்ள வேண்டிய ராசிக்காரர்கள்**

**மேஷம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, கும்பம்.**

கணித்தவர் : சிவமனோகரன்.செல் : 7200097256

# ஆகஸ்ட் மாத பலன்கள்

⌘ எப்பொழுதும் நவக்கிரகங்களை வழிபடும்போது இடமிருந்து வலமாக சுற்ற வேண்டும்.

⌘ பூஜையறையில் சங்கு வைத்திருந்தால் அதில் கண்டிப்பாக துளசி வைக்க வேண்டும்.

⌘ கோவில் திருவிழா நாட்களில் திருமண நிகழ்ச்சிகளை கோவிலிலும், சுற்றுப்புறங்களில் செய்யக் கூடாது.




**எதிலும் தன்னை முதன்மை படுத்திக் கொள்ளும் மேஷ ராசி அன்பர்களே!**

இம்மாதம் 2-ம் தேதி குரு பெயர்ச்சி ஆவதாலும், அதன் பார்வைபலம் சிறப்பாக உள்ளதாலும் பல நன்மைகள் நடக்கும் எங்கும் எதிலும் வெற்றிகிட்டும். ஆரோக்கியம் சீரடையும். இருப்பினும் பழைய கடன் மனதிற்கு வருத்தத்தை கொடுக்கும். குருபகவானால் தேவைகேற்ற வரவு இருக்கும். கலைஞர்கள் மகிழ்ச்சி அடைவர்.

**பரிகாரம்: சூரிய வழிபாடும், சனீஸ்வரன் வழிபாடும் மிக அவசியம்.**




**அழகிலும் தன்னை அழகு படுத்திக் கொள்வதிலும் முதன்மையாக திகழும் ரிஷப ராசி அன்பர்களே!**

இம்மாதம் குருபகவான் பெயர்ச்சியால் மிகவும் நன்மை தரும். கடந்த காலத்தில் இருந்த குழப்பம் நீங்கி, மகிழ்ச்சி பெறுவீர்கள். மேலும் அரசாங்கத்தினால் நன்மை, உங்களுடைய கருத்துக்கு மிக சிறந்த அங்கீகாரம் இருக்கும். தொழில் மேன்மை அடையும். கலைஞர்கள் புதிய வாய்புகள் பெறுவர்.

**பரிகாரம்: வியாழக்கிழமைகளில் தட்ஷிணா மூர்த்தி வழிபாடு அவசியம்.**




**அறிவாற்றல் மிக்க, சிக்கனத்தோடு செயல்படும் மிதுன ராசி அன்பர்களே!**

2-ல் சூரியன் காணப் படுவதால் வாக்கில் நிதானம் தேவை. தொழிலில் போட்டி காணப்படும். ஆரோக்கிய குறைவு, மருத்துவ செலவு ஏற்படும். குருபெயர்ச்சிக்கு பிறகு உடன் பணியாற்றுபவர்கள் ஒத்துழைக்க மறுப்பார்கள். பழகுவதில் எச்சரிக்கையும், குறைகூறுவதிலிருந்து விலகியும் இருங்கள்.

**பரிகாரம்: வியாழன் அன்று தட்ஷணாமூர்த்தி வழிபாடு, வெள்ளிக்கிழமை இராகு காலத்தில் அம்மன் வழிபாடு நன்மை பயக்கும்.**




**பழகுவதிலும், மற்றவர்களை பேசி மயக்குவதிலும் கைதேர்ந்த கடக ராசி அன்பர்களே!**

இம்மாதம் ராசியில் சூரியன் காணப்படுவதால், முன்கோபம் அதிகமாக இருக்கும். 20-ம் தேதிக்கு பிறகு அனைத்தும் மாறும். எண்ணியதை இனிதாக முடிக்கும் தருணம். குருவருள் சிறப்பாக உள்ளதால் பணவரவு சிறப்பாக இருக்கும். குருப்பெயர்ச்சிக்கு பின் உறவுகளிடம் சண்டை சச்சரவு ஏற்படும். பார்வை பலம் அதிகரிக்கும்.

**பரிகாரம்: செவ்வாய் ராகுகால பூஜை, சனியன்று நெய்விளக்கு ஏற்றி வழிபடுவது நற்பயன் பயக்கும்.**




**மனதில் உறுதியும், நம்பியவர்களுக்கு துணையாகவும் விளங்கும் சிம்ம ராசி அன்பர்களே!**

கடந்த காலத்தில் இருந்த குழப்பம் நீங்கி மனத்தெளிவு பிறக்கும். அறிவாற்றலால், தன்னை முன்னிறுத்திக் கொள்வீர்கள். குருபகவான் 2-ம் இடத்துக்கு வருவதால். பணவரவு கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். தொழில் மேம்படும்.

**பரிகாரம்: செவ்வாயன்று ராகு காலத்தில் அம்மன் வழிபாடு அருளை வழங்கும்.**




**எதிலும் புத்திசாலித்தனமாகவும், பொறுமையாகவும் செயல்படும் கன்னி ராசி அன்பர்களே!**

குரு ஜென்ம ராசிக்கு வருவதால், பார்வை பலம் மிக சிறப்பாக இருக்கும். புதன் பகவான் அருளால் மகிழ்வீர்கள். பணவரவு அதிகரிக்கும். நினைத்ததை வாங்குவீர்கள். காதல் கைகூடும். கலைஞர்களுக்கு இம்மாதத்தை காட்டிலும் செப்டம்பர் மாதம் சிறப்பு பெறுவீர்.

**பரிகாரம்: வெள்ளியன்று அம்மன் வழிபாடுங்கள்.**




**எப்போதும் மகிழ்ச்சியும், எல்லோரிடமும் நட்பும் பாராட்டும் துலாம் ராசி அன்பர்களே!**

இம்மாதம் வரும் குரு உங்களுக்கு விரய குரு, இருப்பினும் கவலை கொள்ள வேண்டாம். ஏனெனில், பார்வை பலம் சிறப்பாக உள்ளது. வித்தைக்கு வெற்றி, புதுமுயற்சிக்கு வெற்றி, வீடுமாற்றம், இடமாற்றம் ஏற்படும் உத்தியோகத்தில் கடல் கடந்து அழைப்பு வரும். எற்படும். யோசித்து செயல்படுங்கள்.

**பரிகாரம்: இராகு காலத்தில் வெள்ளி, செவ்வாய் கிழமைகளில் வழிபடுவது நன்மை பயக்கும்.**




**பிறர் மெச்சத்தகுந்த அளவில் வாழ்க்கையை நடத்தும் விருச்சிக ராசி அன்பர்களே!**

ராசியிலே சனி, செவ்வாய் இருந்து உங்களை கஷ்டப்படுத்திக் கொண்டு இருக்கின்றன. இது 14-ம் தேதி சனி வக்கிர நிவர்த்திக்கு பிறகு மாறும். குருப்பெயர்ச்சி சிறப்பான பலனைத்தரும். எதிலும் வெற்றி கிட்டும். புதிய வாய்ப்புகள் தேடிவரும். ஆன்மீக சிந்தனை மேலோங்கும். குடும்ப பிரச்சனைகள் வந்து நீங்கும். தாய்வழியில் விரோதம் ஏற்படும். வாகனங்களில் கவனம் தேவை. **பரிகாரம்: சனி, செவ்வாய் கிரகங்களுக்கு அர்ச்சனை செய்யுங்கள்.**




**தனத்திலும், தர்மத்திலும் சிறந்து விளங்கும் தனுசு ராசி அன்பர்களே!**

குருபகவான் இடமாற்றத்தால், தொழில் மாற்றம், இடமாற்றம் ஏற்படும். தைரியம் குறையும். உறவு முறைகளில் சிறிய குழப்பம் ஏற்படும். பணவரவு நிம்மதியளிக்கும். மாத பிற்பகுதியில் சுக்கிரன், புதன், குரு சேர்க்கையால், பல நன்மைகள் உண்டு. பெண்கள் நினைத்த காரியம் கைகூடும். அனைத்து தொழிலும் சிறப்பாக மேம்படும். கொடுத்த வாக்கை காப்பாற்ற அதிக சிரமம் ஏற்படும்.

**பரிகாரம்: ஞாயிறு தோறும் பிள்ளையார் வழிபாடு சிறப்பு தரும்.**




**எதிர்ப்பை சுலபமாக சந்தித்து அதில் வெற்றி பெறும் மகர ராசி அன்பர்களே!**

அஷ்டம குருவால் அவதியுற்ற நீங்கள் குருமாறுதல் காரணமாக சிறப்பு பெறுவீர்கள். உங்கள் ராசியை குரு 5-ல் பார்ப்பதால், சமூகத்தில் அந்தஸ்து உயரும். வருமானம் உயரும். வாழ்க்கை தரம் மேம்படும். இருப்பினும் பேச்சில் கவனம் தேவை. வெற்றிமேல் வெற்றி வந்து சேரும் மாதம். துன்பமும் பின் மகிழ்ச்சியும் மாறி வரும்.

**பரிகாரம்: சனி, செவ்வாய் கிரகங்களை சாந்தி செய்ய வேண்டும். திருநள்ளாறு சிறந்தது.**




**பிறருக்கு அறிவுரை கூறுவதில் மகிழ்ச்சி அடையும் கும்ப ராசி அன்பர்களே!**

குருப்பெயர்ச்சியால் அஷ்டமத்து குரு கஷ்டத்தைக் கொடுப்பார். ஆனால் பார்வைபலம் சிறப்பாகவும் கஷ்டத்தை தாங்கும் பலம் கொடுப்பார். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். செவ்வாய், சனி சேர்க்கை சிறப்பு தரும். தொழில் மாறுதல் அல்லது விரிவடையும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு. **பரிகாரம்:பிள்ளையாருக்கு அருகம்புல் செலுத்தியும், செவ்வாயன்று துர்கையையும் வழிபடுங்கள்.**




**எல்லோரிடமும் அன்பாக பழகும் இயல்புடைய மீன ராசி அன்பர்களே!**

குருவால், மகிழத்தக்க சம்பவம் நிகழும். அரசு வழியில் காரிய தடங்கல் எற்பட்டு நன்மையாகவே முடியும். தொழில் வளம் பெருகும். கலைஞர்கள் சிறப்பான வாய்ப்பை பெறுவார்கள். தெய்வ வழிபாடு மனதில் மேலோங்கும். குடும்பத்தில் அமைதி பெருகும்..

**பரிகாரம்: ராகு, கேது தலங்களுக்கு சென்று வருவது உத்தமம்.**



# கவலை மறந்தால் தூங்கலாம்!

பணிச்சுமை, குடும்பப் பிரச்சினை, கடன் தொல்லை போன்றவை மனதின் பெரும்பகுதியை ஆக்கிரமித்துக் கொள்ளும் வேளைகளில் ஏராளமானவர்கள் இரவு வேளைகளில் தூக்கம் வராமல் துன்பப் படுவதுண்டு.

விடியும்வரை புரண்டுப் புரண்டு படுத்தும் தூக்கம் வராமல் அவதிப்படும் சிலர் மறுநாள் காலை தங்களது வழக்கமான பணிகளில் ஈடுபடுகின்றனர். இதன் விளைவாக ஞாபகமறதி உள்ளிட்ட பல்வேறு எதிர்வினைக்கு இவர்கள் ஆளாகிப்போகும் வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

இதைப்போன்றவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் விதமாக அறுபதே வினாடிகளில் எளிதாக உறங்கும் முறையை அமெரிக்காவின் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தை சேர்ந்த உடற்கூறியல் நிபுணரான டாக்டர் ஆண்ட்ரூ வெய்ல் என்பவர் கண்டுபிடித்துள்ளார்.

இந்த எளிதில் உறங்கும் கலைக்கு '478 டெக்னிக்' என அவர் பெயர் சூட்டியுள்ளார். இந்தக் கலையை பயன்படுத்தி உறங்கச் செல்பவர்கள் நிம்மதியான உறக்கத்துக்கு பின்னர், மறுநாள் காலை புத்துணர்ச்சியுடன் விழிக்கவும் முடியும் என ஆண்ட்ரூ வெய்ல் கூறுகிறார். இந்த முயற்சியின் முதல்படியாக, கண்களை மூடியபடி நான்கு வினாடிகளுக்கு மூச்சினை நன்றாக உள்ளே இழுக்க வேண்டும். அந்த மூச்சுக் காற்றை ஏழு வினாடிகளுக்கு நாசிக்குள் நிறுத்திவைத்து அமைதியாக இருக்க வேண்டும். பின்னர், 8 வினாடிகளுக்கு மூச்சுக்காற்றை ஒரே சீராக வெளியேற்ற வேண்டும்.

இப்படி, தொடர்ந்து மூன்று முறை (57 வினாடிகளுக்கு) செய்ய வேண்டும். அடுத்த 3 நிமிடங்களுக்குள் உங்களுக்கு நிச்சயமான, நிம்மதியான உறக்கம் வந்துவிடும் என இவர் கூறுகிறார்.

இது எப்படி சாத்தியம் ஆகிறது?.., இந்த முறையில் உங்கள் நுரையீரலுக்குள் மூச்சுக்காற்றை நிறுத்தி வைக்கும் அந்த 7 வினாடிகள் முக்கிய பங்காற்றுகின்றது. இதன் மூலம் நுரையீரல் முழுவதும் ஆக்சிஜன் பரவுகின்றது. இது உடலை தளர்வடையச் செய்து, ஆசுவாசப்படுத்து கின்றது.

அதேவேளையில், இத்தனை வினாடி களுக்கு இதை செய்ய வேண்டும் என உங்கள் மனதையும் நீங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதால், நினைவை பாதிக்கும் தேவையற்ற அழுத்தமும், எரிச்சலும் தானாகவே மனதைவிட்டு வெளியேறி விடுகின்றது.

இந்த முறைகளின் மூலம் மனதை விட்டு விலகாமல் அட்டை போல ஒட்டிக் கொண்டிருக்கும் தேவையற்ற மனக்கவலை களையும் வெளியேற்றி விட்டால், அடுத்த வினாடியே நிம்மதியான உறக்கம் உங்களை தழுவிக் கொள்ளும் என டாக்டர் ஆண்ட்ரூ வெய்ல் உறுதியுடன் கூறுகிறார்.





## பல விருதுகள் பெற்ற பெருமைக்குரிய ஐ.பி.எஸ்...அதிகாரி

# சைலேந்திரபாபு. I.P.S.,

பொதுமக்களுக்கு சிறப்பாக பணியாற்றுவதன் மூலம் தான் வகிக்கும் பதவிக்கும் அதனால் தமிழக அரசுக்கும் பெருமையை தேடித் தருகின்ற எத்தனையோ ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். அவர்களின் பெருமைகளை எடுத்துக்சொல்வதன் மூலம் அவர்களுக்கு சமுதாயத்தில் ஒரு நன்மதிப்பை பெற்றுத்தர வேண்டும் என்று

**மித்ரா டைம்ஸ்**

விரும்புகிறது. இனி ஒவ்வொரு இதழிலும் ஒரு ஐ.ஏ.எஸ். அல்லது ஐ.பி.எஸ் அளவிலான அலுவலகர்களின் பெருமைகள் தொடர்ந்து இடம் பெறும்.


-ஆசிரியர்

- கடமையுணர்வுக்கான இந்தியக் குடியரசுத் தலைவரின் விருது.
- உயிர் காத்த செயலுக்கு இந்தியப் பிரதமரின் விருது.
- வீரதீர செயலுக்கான தமிழக முதல்வரின் விருது.
- கடமை உணர்வுக்கான தமிழக முதல்வரின் விருது,
- சிறப்பு அதிரடிப்படையில் வீரதீர செயலுக்கான தமிழக அரசின் விருது.
- சிறப்பு பணிக்கான இந்தியக் குடியரசு தலைவரின் விருது.

என பல்வேறு விருதுகளைப் பெற்ற பெருமைக்குரிய ஐ.பி.எஸ்.அதிகாரியான சைலேந்திரபாபு அவர்கள் காவல்துறைக்கு வரத்துடிக்கும் இளைஞர்களுக்கு ஒரு முன்னோடியாக விளங்குகிறார்.

1962 ஜூன் 5 ஆம் நாள் பிறந்த முனைவர் சைலேந்திர பாபு, 1987 ல் தமிழ்நாடு பணிநிலைப் பிரிவின் இந்தியக் காவல் பணி அதிகாரி ஆகப் பணியைத் தொடந்தார். அவர் 2012 வரை தமிழ்நாடு கடலோர பாதுகாப்பு குழுவின் காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநராகப் (ADGP) பணியாற்றினார்.

"என் குடும்பத்தில் மொத்தம் எட்டு பிள்ளைகள். நான் ஆறாவது பையன். என் அப்பா, இந்திய ராணுவ கப்பல் பிரிவில் பணியில் இருந்தார். பின், கேரள போக்குவரத்துத் துறையில் பணியில் இருந்தார். படிப்பில், பெற்றோர் மிகவும் கண்டிப்புடன் இருந்தனர். கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு அரசு உயர்



நிலை



**வரலாறு காணாத வெள்ளத்தில் சென்னை மாநகரம் சிக்கித் தவித்தபோது பதறிப்போன சைலேந்திரபாபு ஐ.பி.எஸ். தானே களத்தில் இறங்கி பொதுமக்களை காப்பாற்றினார்..**

ப் பள்ளியில்,முதல் மாணவன் என்ற பெருமையுடன் வெளியேவந்தேன். ஏழாம் வகுப்பு வரை பள்ளியில் நான் சுமாரான மாணவனாக, சக மாணவர் களுடன் எப்போதும் சண்டையிட்டுக் கொண்டிருந்தேன். எட்டாம் வகுப்பில், சதானந்தவள்ளி ஆசிரியையின் கண்டிப்பு தான், என்னை சிறந்த மாணவனாக உருமாற்றியது.ஒன்பதாம் வகுப்பில் ஆங்கில ஆசிரியராக வந்த ராமசாமி சார், என் வாழ்வில் மறக்க முடியாத மரியாதைக்குரிய மனிதர்.

என் ஆங்கிலப் புலமையைப் பார்த்து, என்னை என்.சி.சி.,யில் சேர்த்துக் கொண்டார். அங்கு, என் ஈடுபாட்டைப் பார்த்து, 100 மாணவர் களுக்கு தலைவராக, பொறுப்பான பதவி கொடுத்தார்.போலீஸ் துறை மீது ஈடுபாடு வருவதற்கு, அவர் தான் முக்கிய காரணம்." என்று தன்னைப் பற்றி கூறும் சைலேந்திரபாபு மேலும்,

"ஐ.பி.எஸ்., தேர்வில் வெற்றி பெற்றதை, என் அப்பாவிற்குக் கூட தெரிவிக்காமல், அந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள நான் சந்திக்கச் சென்றது, ராமசாமி சாரை தான்.ஆனால், அவர் உயிருடன் இல்லை. உள்ளுக்குள் அழுதபடியே, அவர் படத்தின் முன் நின்று ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு திரும்பினேன். என்னை ஒரு போலீஸ் அதிகாரியாக பார்க்காமலேயே, அவர் மறைந்து விட்டார் என்று கண்கள் பனிக்க தெரிவிக்கிறார்.

ஏப்ரல் 23, 2012 காவல்துறை கூடுதல் இயக்குனர் (ADGP) கடலோர காவல் படைக்குழு, தமிழ்நாடு

ஜூன் 8, 2011 ஏப்ரல் 23, 2012 காவல் துறை தலைவர் (IG ), வடக்கு மண்டலம், தமிழ்நாடு

பிப்ரவரி 21, 2010 ஜூன் 8, 2011 காவல் துறை ஆணையாளர், கோயம் புத்தூர் தமிழ்நாடு

செப்டம்பர் 11, 2008 - பிப்ரவரி 21, 2010 காவல்துறை தலைவர் (IG ), தமிழ்நாடு காவல்துறை சிறப்பு அதிரடிப்படை தலைவர் என பல்வேறு பதவிகளை வகித்து அந்த பதவிகளுக்குரிய கடமைகளை சிறப்பாக செய்து வந்துள்ளார். இவரின் கடமைகளுக் கிடையே ஆற்றிய மனித நேயப் பணிகள்.

திரு.சைலேந்திர பாபு.ஐ.பி.எஸ், சென்னை சாலை விபத்தில் உயிருக்கு போராடும் ஒரு பெண்ணை தனது வாகனத்தில் மருத்துவமனைக்கு கொண்டு செல்கிறார்.

விபத்து நடந்தவுடன் அந்த இடத்திற்கு வந்த அதிகாரிகள் இருங்கள் ஆம்புலன்ஸ் வரட்டும் என்று சொன்னார்கள் அந்த வழியாக வந்த திரு.சைலேந்திரபாபு. ஐ.பி.எஸ், அவர்கள் உடனே இறங்கி உயிருக்கு ஆபத்தான நிலையில் இருக்கிறார் வேடிக்கை பார்க்கிறீர்கள் இந்த டிராஃபிக்ல் ஆம்புலன்ஸ் எப்பொழுது வருவது என்று தானே அந்த மயங்கி ரத்தம் சொட்டியநிலையில் இருந்த பெண்ணை. தன் பதவியையும் பொருட்படுத்தாமல் தூக்கி தனது காரிலேயே மருத்துவ மனையில் கொண்டு சேர்த்தார் ..

சின்ன சின்ன பதவியில் இருப்பவர் கள் கூட பந்தா காட்டிக் கொண்டு செய்ய யோசிப்பார்கள் ... ஆனால் ஓர் உயர் அதிகாரி எதைப்பற்றியும் பொருட் படுத்தாமல் செய்த காரியம் அனைவரையும் சிலிர்க்க வைத்தது!

கோவையில் 10 வயது சிறுமியையும், அவள் தம்பியையும் பள்ளி செல்லும்போது கடத்தி, சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்து பின்னர் இருவரையும் தண்ணீரில் தள்ளி கொடூரமாகக் கொன்ற மோகன்ராஜ் என்கிற மோகன கிருஷ்ணனை போலீஸார் என்கவுன்டர் மூலம் சுட்டுக் கொன்றனர்.

காவல்துறை அதிகாரியான சைலேந்திரபாபு எழுதுவதிலும் புலமை பெற்றவர் என்பது அவர் எழுதிய

- **உடலினை உறுதி செய்,**
- **அமெரிக்காவில் 24 நாட்கள்,**
- **நீங்களும் ஐ.பி.எஸ் அதிகாரி ஆகலாம்**

ஆகிய மூன்று புத்தகங்களை படிக்கும்போது அறிய முடிகிறது.

**எம்.எஸ்.மூர்த்தி**

## கட்டப்பஞ்சாயத்தை இரும்பு கரம் கொண்டு ஒடுக்குவார் முதல்வர்!

தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருப்பதாக சட்டப்பேரவை நிதியமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் பேசியுள்ளார். அப்போது பேசிய தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர்கள் தமிழகத்தில் நிலவும் சட்டம் ஒழுங்கு சீர்குலைவை குறிப்பிட்டு பேசியுள்ளார்.

தீவிரவாதம், கட்டபஞ்சாயத்து, ரவுடித்தனம் ஆகிவற்றை ஒழிப்பதில் முதல் அமைச்சர் ஜெயலலிதாவுக்கு சிறப்பான பங்கு உண்டு. சந்தனக்கடத்தல் வீரப்பன், அயாத்தி குப்பம் வீரமணி என காவல் துறையினரால் நெருங்க முடியாமல் கோலோச்சி வந்தவர்களை எல்லாம் என்கவுண்டர் மூலம் முதலமைச்சர் ஆட்சியில் முடிவுக்கு வந்தது.

எனவே தற்போது தமிழகத்தில் ஆங்காங்கே இன்னமும் கட்சி வித்தியாசம் இல்லாமல் கட்டபஞ்சாயத்தில் ஈடுபட்டு தொழிலதிபர்களை வீடு கட்டுபவர்களை மிரட்டி வருபவர்கள் மீது தமிழக அரசின் முதலமைச்சர் ஜெயலலிதாவின் சிறப்பான செயல்பாட்டின் மூலம் இரும்புகரம் கொண்டு கட்டபஞ்சாயத்தை ஒழிப்பார் என்று பொதுமக்கள் நம்புகின்றனர்.



# பட்ஜெட்டில் சொன்னதைச் செய்வார் அம்மா!

## - தமிழக மக்கள் நம்பிக்கை

**"இவ்வளவு தான் என்று எண்ணி விடாதீர்கள் இதற்கு மேலும் நிறைய செய்வேன். ஏன் என்றால் ஒரு தாய்க்குத்தான் தன் பிள்ளைகளுக்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரியும்". இவ்வாறு தேர்தல் சமயத்தில் வாக்குறுதி தந்தார் முதலமைச்சர் ஜெயலலிதா.**

சமீபத்தில் தாக்கல் செய்யப்பட்ட தமிழக அரசின் பட்ஜெட்டில் முக்கிய அம்சங்களாக கீழ்கண்டவை பொதுமக்களால் வெகுவாக பாராட்டப்படுகிறது.

முக்கிய அம்சங்கள்

* நிகழாண்டில் ரூ.6 ஆயிரம் கோடி புதிய பயிர்க் கடன்கள்
* லோக் ஆயுக்த அமைக்கப்படும்
* மாணவர்களுக்கு 5.25 லட்சம் மடிக்கணினிகள்
* அக்டோபரில் உள்ளாட்சித் தேர்தலை நடத்த ரூ.183.24 கோடி
* உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.11,514.34 கோடி நிதி
* மாற்றுத் திறனாளிகளுக்கு 1,000 ஸ்கூட்டர்கள்
* உலமாக்கள் உதவித்தொகை ரூ.1,500 ஆக உயர்வு
* 2,000 பேருந்துகள் வாங்க ரூ.275 கோடி
* மதுரையில் பால் பொருள்கள் தயாரிக்க புதிய தொழிற்சாலை
* மீன்பிடி தடைக்கால நிவாரணம் ரூ.5 ஆயிரமாக உயர்வு
* தமிழ்நாடு தொழில் கூட்டமைப்பு நிதியத்துக்கு ரூ.2 ஆயிரம் கோடி
* சாலைப் பாதுகாப்புக்கென ரூ.150 கோடி நிதி
* பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ், ரூ.420 கோடியில் 20 ஆயிரம் வீடுகள்
* 18,500 மெகாவாட் கூடுதல் மின்னுற்பத்தித் திட்டம்.

இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்ய முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவிடுவார் என பொதுமக்கள் பெரிதும் நம்புகிறார்கள்.

தமிழக அரசின் ஒட்டுமொத்த பட்ஜெட் அளவு ரூ.1 லட்சத்து 84 ஆயிரத்து 293 லட்சம் கோடியாகும். வரும் நிதியாண்டில் வருவாய் வரவுகள் ரூ.1 லட்சத்து 42 ஆயிரத்து 681 கோடியாக இருக்கும். அதே நேரத்தில் செலவுகள் ஒரு லட்சத்து 47 ஆயிரத்து 297 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது. இதன் மூலம், அரசுக்கு ரூ.4 ஆயிரத்து 616 கோடி வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.





# சுமையாக இருந்தாலும் கடன் விவகாரங்களை தமிழக அரசு திறமையாக கையாள்கிறது

## -நிதித்துறை முதன்மைச் செயலாளர் கே.சண்முகம் ஐ.ஏ.எஸ்.

தமிழக அரசின் ஒட்டுமொத்த பட்ஜெட் அளவு ரூ.1 லட்சத்து 84 ஆயிரத்து 293 லட்சம் கோடியாகும். வரும் நிதியாண்டில் வருவாய் வரவுகள் ரூ.1 லட்சத்து 42 ஆயிரத்து 681 கோடியாக இருக்கும். அதே நேரத்தில் செலவுகள் ஒரு லட்சத்து 47 ஆயிரத்து 297 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது. இதன் மூலம், அரசுக்கு ரூ.4 ஆயிரத்து 616 கோடி வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

**“முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆட்சியில் இதுவரை எந்த அதிகாரியும் பத்திரிகைகளுக்கு பேட்டியளித்ததில்லை முதல் முறையாக நிதித்துறை செயலாளர் அளித்த பேட்டி..”**

தமிழகத்தில் வறுமை ஒழிப்புக்கு முன்னுரிமை கொடுத்து அதற்காக ரூ.862 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக திறன் வளர்ப்பு, உள்கட்டமைப்பு பணிகள் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் தரப் பட்டுள்ளது.

உள்ளாட்சித்துறைகளுக்கு உட்பட்ட சாலைகள் 6 ஆயிரம் கி.மீ. நீளமும், நெடுஞ் சாலைத் துறைக்கான சாலைகள் 4 ஆயிரம் கி.மீ. நீளமும் மேம்படுத்தப் படவுள்ளன. நெடுஞ்சாலைத் துறைக்கான சாலைகளில் ஆயிரம் கி.மீ. நீள சாலைகள் அகலப்படுத்தப் படவுள்ளன. 427 கி.மீ. நீள சாலைகள் இருவழிச் சாலைகளாக மாற்றப்படவுள்ளன.

சுகாதார திட்டங்களில் ஒன்றாக, தமிழகம் முழுவதும் 15 லட்சம் குடும்பங்களுக்கு தனிநபர் கழிப்பறைகளை கட்ட திட்டமிடப் பட்டுள்ளது. இப்படி பல புதிய திட்டங்களை பட்ஜெட்டில் பார்க்கலாம்.



திரு.சண்முகம் ஐ.ஏ.எஸ்.
நிதித்துறை செயலாளர்

சமூகநல பாதுகாப்பு திட்டங்களுக்காக 33.51 சதவீத நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பொருளாதார மேம்பாடு சற்று பிரச்சினையாக இருப்பதால் தொழில் துறைக்கு ஊக்கம் கொடுக்கும் அளவில் வரிச்சலுகைகள் அறிவிக்கப் பட்டுள்ளன.

நேரடி மானியங்களுக்காக ரூ.12 ஆயிரத்து 936 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் உணவுத்துறைக்கு ரூ.5 ஆயிரத்து 300 கோடி, மின்சாரத் துறைக்கு ரூ.7 ஆயிரத்து 136 கோடி, போக்குவரத்துத் துறையில் டீசல் மானியத்துக்காக ரூ.500 கோடி ஆகியவை அடங்கும்.

தமிழகத்திற்கு வணிகவரி மூலம் கணிசமான வருவாய் வருகிறது. பல்வேறு வரிகள் மூலம் வருவாய் ரூ.96 ஆயிரத்து 83 ஆயிரம் கோடி வரும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அது குறைந்து விட்டது.

அந்த வகையில் வணிகவரியின் வருவாய் அளவு ரூ.4 ஆயிரத்து 200 கோடியும், பத்திரப்பதிவின் மூலம் ரூ.1,140 கோடியும், போக்குவரத்து மூலம் ரூ.867 கோடியும் வருவாய் அளவு குறைந்துவிட்டது. இதனால், மாநில வரிவருவாயின் அளவு ரூ.85 ஆயிரத்து 772 கோடியாக குறைத்து மதிப்பிடப் பட்டுள்ளது.

டாஸ்மாக் மது விற்பனை மூலமாக 201415 நிதியாண்டில் ரூ.26

ஆயிரத்து 188 கோடி வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். 201516ம் ஆண்டில் மது விற்பனை ரூ.29 ஆயிரத்து 672 கோடியாக உயரும் என மதிப்பிட்டுள்ளோம். இதில் வணிகவரி, கலால்வரி ஆகியவை அடங்கும்.

தமிழக அரசு மூலதன பணிகளுக்காக கடன் வாங்கிச் செலவிடுகிறது. அதனால் பொருளாதார நிலையில் ஏற்றம் காண்பதோடு வரிவருவாயை பெருக்க முடியும். தமிழகத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.எஸ்.டி.பி.)யில் 25 சதவீதத்துக்கு மேம்பட்டு கடன் வாங்கக் கூடாது என்று நிதிக்குழு பரிந்துரைத் துள்ளது. அதை தமிழகம் மீறவில்லை. தமிழகத்தின் கடன் அளவு 19.23 சதவீதத்துக் குள்தான் உள்ளது. கடன் பிரச்சினையை அரசு திறமையாக கையாள் கிறது.

தற்போது தமிழகத்தின் கடன் அளவு ரூ.1.81 லட்சம் கோடியாகும். இந்த கடன் அளவு அடுத்த நிதியாண்டில் ரூ.2.11 லட்சம் கோடியாக அதிகரிக்கக்கூடும். இதற்கான வட்டிதொகையாக ரூ.17 ஆயிரம் கோடியை அரசு செலுத்தி வருகிறது. கடன் மூலம் செய்யப்படும் முதலீட்டால் பொருளாதார வளர்ச்சியும், வரி வருவாயும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே கடன் சுமை குறையும். கடனைத் திருப்பிச் செலுத்துவதில் தமிழக அரசுக்கு திறன் உள்ளது.

மின்சார உற்பத்தி, பகிர்மான கழகத்துக்கு (டான்ஜெட்கோ) ரூ.73 ஆயிரம் கடன் உள்ளது. அதற்கு தமிழக அரசு ரூ.7,200 கோடி கடன் கொடுத்துள்ளது.

பொருளாதார நெருக்கடி தமிழகத்துக் கும் உள்ளது. இது இந்திய அளவில் ஏற்பட்டுள்ள மந்தமான சூழ்நிலையாகும். எனவே நாட்டின் ஒரு அங்கம் என்ற முறையில் நாமும் பாதிக்கப்படுகிறோம். இந்த சூழ்நிலையை நாம் கடந்து விடுவோம்.ரி வருவாய் கூடுவது குறைவது போன்றவை சுழற்சியாக வருகின்றன. எனவே வருவாய்ப் பற்றாக்குறை ஏற்படுவதை பிரச்சினையாக எடுக்கத் தேவையில்லை. இவ்வாறு அவர் கூறினார்.











# Helping Children With Manners

Manners are constantly changing from one century or one generation to the next. For example, a handshake originally was meant to show that men were not carrying a sword or dagger in their hands. Men still tip their hats because once knights in armor lifted the visors of their helmets to show their faces. And it wasn't too many years ago that a man almost always got up in a crowded bus and gave his seat to a woman. Nevertheless, certain manners do survive from one decade to the next, and this is because manners make life easier for everybody.

There are three important ideas behind the good manners we use today: custom, consideration, and common sense. Custom is the habit of doing certain things like shaking hands and tipping hats mentioned above. Consideration is the most important idea behind all good manners. Almost always, being considerate is being well-mannered. Consideration is simply thinking about the way the other person feels. Being rude to someone is bad manners, not because a book says so, but because it causes hurt feelings. Nearly all good manners have in element of common sense. If you are standing in the rear of a crowded elevator, it's not reasonable-nor good manners-to try pushing your way to the front so you can get out first.

These are the basic ideas we want to teach our children when we are trying to instill good manners-simple kindness, consideration, and common sense. The following suggestions written for and



directed to children may give some added authority in the matter of what is common courtesy and what is not.

**Manners at Home**

Home is where you learn to get along with people. 'Me closer you live with other people, the more important good manners are. Everybody in a household should respect the rights and feelings of everybody else. Try to listen when others in the family have something to say. Even a little brother or sister who can't yet read or a grandmother who seems quite old has a right to an opinion.

It is important for members of a family to consider each other's privacy. No matter how crowded a home is, everyone in it has a right to some place that is his own. Here are some privacy don'ts:

· Don't open a closed door until you have knocked and waited for permission to enter.

· Don't go into anyone else's bureau, desk, box, or papers at home or anywhere else without his permission.

· Don't read anyone's mail or anything he has written (for example, a diary) unless he asks you to.

· Don't discuss the private affairs of your family with outsiders or tell about a family problem.

Another important part of family good manners is sharing. You share the TV set and the telephone and the bathroom and maybe a bedroom or a closet or a desk. You share the work. This means cleaning up after yourself and sharing the responsibility for the safety of everyone in the house.

**Telephone Manners**

Always give the person you are calling plenty of time to get to the phone before you hang up. If the person who answers is not the one you want, give your name and ask if you may speak to the person you've called. Ask, “May I speak to Tommy?” not “Is Tommy home!” If he isn't in, you may leave a message.

If someone dials your number accidentally, accept his apology. Everyone sometimes dials a wrong number. No one intends to. If you accidentally dial a wrong number, excuse yourself.

It is considerate to make phone calls at a time when they will not disturb people. Try not to call too early in the morning (before about 9:00) or too late at night (after about 9:30). Try not to call at mealtime.

It's handy to keep a pencil and paper near the phone. If someone calls a member of the family who is not at home, ask the caller if he would llk to leave a message. If



he does, be sure to get his name and number. 7 if you take a message, be sure to remember to deliver it!

**Table Manners**

Most families have established their own table manners that are important to them. Here are a few that should be remembered when you are at home and when you are a guest:

· Never reach for any food that is not right in front of you. Ask someone to pass it. And if you are passing something, don't help yourself along the way.

· If your food is too hot, wait for it to cool. Don't blow on it.

· If you put something in your mouth that's too hot, don't spit it out. Reach for your water and take a quick swallow.

· Don't talk with your mouth full.

· Bring your food up to your mouth rather than bending over to reach it.

There are a few additional rules for eating in a restaurant:

· Don't be upset if you spill something. It happens all the time. The waiter will clean it up.

· Don't pick up your silverware if you drop it on the floor. Ask the waiter to replace it for you.

· Don't put packages or handbags on the table.

· Don't comb your hair at the table.

· Don't use a toothpick in public.

Being a Guest

We all know that we have certain responsibilities when we are the host or hostess. But there are responsibilities when one is a guest that are equally important. Here are a few of them:

· Don't go visiting unless you're expected.

· Don't overstay your invitation.

· Don't expect to be waited on. Offer to help.

· Don't plan to stay overnight without consulting the hostess and your parents.

· Don't upset the family's routine.

· Don't make extra work. Make your bed, straighten up after yourself.

· Be sure to say thank you for a meal or an overnight visit at a friend's house.

**Manners on the Street**Unless you are at home or at a friend's house, you are on public property. Bemuse this property is used by many people, it is especially



important that everyone use common sense and good manners. Here are some street don'ts:

· Don't walk in bunches so that you block others.


· Don't stop to chat in the middle of the sidewalk. Step to the side so that people won't have to move around you.

· Don't stare at or make fun of anyone, no matter how strange he may look.

· Don't be a litterbug.

· Don't mark on buildings or other public property.

· If you bump into someone or step on his toe, say you're sorry.



# கபாலி

## மாற்றமா? ஏமாற்றமா?



என்ன மாமா கபாலி படம் பாத்தியா...

ரஜினிபடம் மாதிரியே இல்லையே. கபாலியில் ரஜினி நடிக்கிறார்ன வுடனே நீ பாட்டுக்கு தர்மத்தின் தலைவன், ராஜாதி ராஜா, மன்னன்,மாப்பிள்ளை, தளபதி அண்ணாமலை, பாட்ஷா படம் மாதிரி இருக்கும்னு நினைச்சி போயிருப்ப. இது அட்டக்கத்தி, மெட்ராஸ் படத்தை இயக்கின ரஞ்சித் படம். இதுல வழக்கமான ரஜினி ஸ்டையில், பஞ்ச் டைலாக், பைட்டுனு ஏகத்துக்கும் எதிர்பார்த்து இருப்ப. ஆமாம் மச்சான்.

அப்படியா கதை என்ன மாமா.

நடிகர் சங்கத்தலைவர் நாசர் படத்தில தொழிற்சங்க தலைவரா வராரு. தொழிலாளர்களுக்கு ஆதரவா பேசராரு.. போராடுறாரு...அவர கொன்னுடுறாங்க.. அவருக்கு அப்புறம் ரஜினி அந்த இடத்துக்கு வராரு. அவரும் தொழலாளர்களுக்காக போராடுறாரு, ஜெயிலுக்கு போறாரு. 25 வருடம் கழிச்சி வெளிய வராரு...வெளிய வந்த பிறகு நடக்கிறது தான் கதை.

என்ன நடக்குது மாமா..






நாசர் மகனே நீதான் தலைவரா ஆகணும்னு எதிர் தரப்பு தூண்டி விட அவர் ரஜினியை போட்டு தள்ள முடிவு செய்ய ரஜினி அவரை நீயுமாடானு போட்டுத் தள்ளிடாரு.

கலையரசன் நடிச்சியிருக்காரே...

அவர் நாசருக்கு பேரனா வராரு. ரஜினிக்கு உதவுறாரு.

தினேஷ்...?

அட்டக்கத்தி தினேஷ் ரஜினி சொன்னதும் அட்டாக் கத்தியா பாயிறாரு. அந்த இடத்தை ஜனங்க ரொம்ப ரசிக்கிறாங்க. சிரிச்சி கை தட்ராங்க.



ரஜினி ஜோடி....?

ராதிகா ஆப்தே. டூயட் இல்ல...ஆனா மனசுல நிக்கிறாங்க.

தன்சிகா நடிக்கிறாளே மாமா...

அது ரஜினி பொண்ணா நடிக்குது. எதிரிங்க ரஜினியை போட்டு தள்ளசொல்லி அந்த பொண்ணையே அனுப்புறாங்க. அது ரஜினியை காப்பத்துது. அப்பானு கூப்பிடுது. அப்புறம் ரித்விகாவும் ரஜினியை அப்ப அப்ப அப்பானு கூப்பிடுது, அவரை அம்போனு விட்டுடதா டைரக்டர் மேல ரசிகர்கள் வருத்தப்படுறாங்க....



ஜான்விஜய்......?

ரஜினிக்கு நண்பரா நடிக்கிறாரு....நல்ல நடிச்சியிருக்காரு.....

சரி கபாலி மாற்றமா.....? ஏமாற்றமா.....?

எனக்கு தடுமாற்றமா இருக்கு...

–சினிமாவி

## அஜீத்தின் மைத்துனர் நடிக்கும் “அந்தமான்”





சிவன் கோவில் அர்ச்சகர், சினிமா பட கதாசிரியராகும் படம் அந்த-மான்.. ஆதவன் இயக்க, ஒளிப்பதிவு. ஆர். செல்வா கலக்க T.R.S. ரமணி அய்யர் (முதன் முதலாக) கதை வசனம், பாடல்கள் எழுத “அந்த-மான்” கலக்கல். அந்தமானைச் சேர்ந்த கண்ணதாசன் என்பவர் வில்லனாக நடித்து தயாரிக்கவும் செய்துள்ளார்.இதில் ரிச்சர்ட் (ஷாலினி அண்ணன்) கதாநாயகனாகவும்,மனோசித்ரா கதாநாயகியாகவும் நடித்திருக்கிறார்கள். மிகப்பெரிய பொருட்செலவில் உருவாகியிருக்கும் இப்படத்தில் காமெடிக்கு பஞ்சமில்லை. இசை SPL செல்வதாசனின் பாடல்கள் ஆறும் தேன் ஆறு. ஒரு பாட்டுக்கு கானாபாலா பாடி குத்தாட்டம் போட்டுள்ளார். T.R.S. ரமணி அய்யர் முதன் முதலாக கதை வசனம், பாடல்கள் எழுதுகின்றார். அவருக்கு சிறந்த சினிமா அங்கீகாரம் கிடைக்கும் என்று நாமும் நம்புவோம்.

# மித்ரா தமிழ்ப் பத்திரிகையாளர்கள் சங்கம்

## MITRA TAMIZH PATHRIGAIYALARGAL SANGAM

ஊடக நண்பர்களே வணக்கம்.

என என்ன தான் சோஷியல் மீடியாக்கள் வந்தாலும் தமிழில் நூற்றுக்கணக்கான தின, வாரமிருமுறை, வார, மாதமிருமுறை, மாத இதழ்கள் தொடர்ந்து வெளிவந்து வாசகர்களால் படிக்கப்பட்டு வருகிறது. இதழ் தயாரிப்பின் பின்னணியில் பல ஆயிரக்கணக்கானோர் பணியாற்றுகின்றனர். இவர்களின் கோரிக்கைகளை அரசிடம் கொண்டு சென்று வென்றெடுக்கவும் சமுதாயத்தில் பத்திரிகையாளர் களுக்கு உள்ள நன்மதிப்பை தக்கவைத்துக் கொள்ளவும். பத்திரிகையாளர் சங்கம் அவசியமாகிறது.

ஏற்கனவே பல்வேறு சங்கங்கள் இருந்தாலும் மித்ரா குழுமத்தின் சார்பில் வெளியாகும் மித்ரா டைம்ஸ் மாத இதழ் சார்பாக ஒரு சங்கம் மித்ரா தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கம் தங்கள் கருத்துகளை பதிவு செய்யவும். சங்கத்தில் தங்களின் பங்கை செலுத்தவும்.


- தொடர்புக்கு -

**எம்.எஸ்.மூர்த்தி**

ஆசிரியர்- மித்ரா டைம்ஸ் மாத இதழ்

பொதுச்செயலாளர்-மித்ரா தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கம்.

# 602, ஸ்ருதி பிளாக், சித்ரா அவென்யூ, 9, சூளைமேடு ஹைரோடு, சென்னை -94.
போன் : 044-23744661, 23743007 | e-mail:mitratimes2015@gmail.com





FRIENDSHIP IS POWER
MIBC

# சீக்கிரமா சேருங்க... சேர்ந்த பின்னாடி நீங்களும் சொல்வீங்க...

# மகிழ்ச்சி

நாங்க சொன்ன மாதிரி எங்க கிளப் மெம்பர் 2000 சென்னை சத்யம், உட்லண்ஸ் ஆகிய இரண்டு தியேட்டர்களுக்கு கபாலி பட டிக்கெட்டும், costly T-Shirt-ம் கொடுத்தோம். பெற்றுக் கொண்ட அனைவரும் சொன்னது 'மகிழ்ச்சி '. மேலும் இதுபோன்ற பல திட்டங்கள் தமிழகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் செயல்படுத்தவுள்ளோம்.

நீங்களும் கிளப்பில் மெம்பரா சீக்கிரம் சேருங்க... நீங்களும் சொல்வீங்க மகிழ்ச்சி...

குறுகிய நாட்களே உள்ளதால் விரைந்து உறுப்பினராகுங்கள். தொழிலில் ஒரு படி மேலே செல்லுங்கள். விண்ணப்படிவத்தினை www.mitra international businessclub.com இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து ரூ.500/-க்கான தொகையினை வரைவோலை/ காசோலை (D.D. / Cheque ) in favour of Mitra International business club Payable at Chennai. பெயரில் அனுப்பவும். Mitra International Business Club HDFC Bank, A/c.NO. 50200005349520 IFSCODE : HDFC 0000206 T.Nagar Branch கணக்கில் cash-ஆக செலுத்தலாம்.







**To Develop Friendship & Business**

## MITRA INTERNATIONAL BUSINESS CLUB

501, சுருதி பிளாக், சித்ரா அவென்யூ, சூளைமேடு, சென்னை-94

போன் : 044-23743007/8